கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# பகவத் தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை டிசம்பர் 2011 ₹15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

மலர் 1, இதழ் 4


நவம்பர் 2011



3 **மக்கள் அசுரர்களானால்...**

—ஸ்ரீல பிரபுபாதர்

நாட்டினர் அனைவரும் அனைத்து வளங்களையும் பெறுவதற்கான ஒரு வழிமுறை



8 **உண்ணாவிரதம் உண்மையும் போலியும்**

—ஸ்ரீ கேசவ தாஸ்

உண்ணாவிரதம்—அடிப்படை விளக்கம், வகைகள், பலன்கள், தவறுகள் மற்றும் பல.

**பாரதப் பண்பாட்டில் பெண்களின் பங்கு** 15

—கீத கோவிந்த தாஸி


மாறிவரும் உலகத்தில் பெண்களின் பிரச்சனைகளுக்கு பாரதப் பண்பாட்டின் அடிப்படையிலான ஓர் ஆய்வு




**உடலுக்கும் ஆத்மாவிற்கும் உள்ள வேறுபாடு** 19

—ஸ்ரீல பிரபுபாதர்

ஸ்ரீல பிரபுபாதருடன் மேற்கு ஜெர்மனியின் ஃப்ராங்க்பர்ட் நகரில் நடைபெற்ற உரையாடல்





21 **மகிழ்ச்சியையும் வேதனையையும் கொடுத்த மகன்**

ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து ஒரு கதை



25 **பகவத் கீதை உண்மையுருவில்**

—ஸ்ரீ கிரிதாரி தாஸ்

பதினொன்றாம் அத்தியாயத்தின் ஒரு கண்ணோட்டம்

**13 நன்றி கெட்ட நபர்கள்**

**29 ஸ்ரீமத் பாகவதம்**

# பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே பகவத் தரிசனம்.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ் (C.செந்தில் குமார்)

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், இராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், சுகோபி தேவி தாஸி, மதுமதி பிரியா தேவி தாஸி, ராஜ சேகர், ஜெய கிருஷ்ண தாஸ்

**பதிப்பாசிரியர்:** யுதிஷ்டிர தாஸ் (உஜ்வல் ஜாஜோ)

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ், வேங்கடேஷ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**பதிப்பகத்தார் அலுவலகம்:** பேக் டு காட்ஹெட், 33, ஜானகி குடிர், ஜுஹு சர்ச் எதிரில், ஜுஹு, மும்பை - 400049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** சாரதி பிரிண்டர்ஸ், 6/63, LIG, தொண்டைமான் தெரு, NH-1, மறைமலைநகர், தமிழ்நாடு - 603209.



**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே. (பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் அறங்காவலர்: ஜெயாத்வைத ஸ்வாமி)



பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை


# உங்களின் வரிகள்

ஒவ்வொரு மாதமும் இப்பத்திரிகையில் வரும் செய்திகளைப் படிக்கும்போது, இது வார பத்திரிகையாக இருக்கக் கூடாதா எனத் தோன்றுகிறது. இதைப் பார்த்தாலும் படித்தாலும் தூய்மையடைந்ததாக உணர்கிறேன். ஜெய்ப்பூரில் உள்ள ராதா கோவிந்தரை அட்டைப் படத்தில் பார்த்ததும் அளவில்லா மகிழ்ச்சியடைந்தேன். சமீபத்தில் ஜெய்ப்பூர் சென்று ராதா கோவிந்தரை வழிபட்டு வந்தோம். அங்குள்ள மக்கள் விடியற்காலை 4:30 மணிக்கு மங்கள ஆரத்திக்கு ஒன்றுகூடி திரண்டு வருகின்றனர். அனைவரும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை மனதாரப் பாடுகின்றனர். மேலும், போலோ போலோ என்று மற்றவரையும் பாட வைத்து மகிழ்கின்றனர். அந்த கண்கொள்ளா காட்சி இன்றும் என் கண்முன் நிற்கின்றது. கிருஷ்ணர் மீது அவர்களுக்கு உள்ள ஆழ்ந்த பக்தியை மறக்கவே முடியாது. இம்மாத அட்டைப் படத்தைப் பார்த்து, கட்டுரையைப் படித்ததும் மீண்டும் என் மனம் ஆனந்த கண்ணீர் சிந்துகிறது.

—ஸ்ரீ காஞ்சனவல்லி தேவி தாஸி, சேலம்

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

சந்தா முடிவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### இப்பத்திரிகையின் குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

## கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

# மக்கள் அசுரர்களானால்...

**1973ஆம் ஆண்டு ஜுன் 19ஆம் தேதியன்று மாயாபூரில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய உரை**

காமம் வவர்ஷ பர்ஜன்ய:
ஸர்வ-காம-துகா மஹீ
ஸிஷிசு: ஸ்ம வ்ரஜான் காவ:
பயஸோதஸ்வதீர் முதா


ஸ்ரீமத் பாகவதம் - 1.10.4

"மாமன்னர் யுதிஷ்டிரரின் ஆட்சிக் காலத்தில், மேகங்கள் மக்களுக்குப் போதுமான மழையைப் பொழிந்தன, பூமி மக்களின் எல்லா தேவைகளையும் மிகுதியாக உற்பத்தி செய்தது, பசுக்களோ அவற்றின் பருத்த பால் சுரப்பிகளாலும் மகிழ்ச்சியான மனநிலையினாலும் மேய்ப்பு நிலங்களை ஈரமாக்குவது வழக்கம்."

## முதல் தரமான மதம்

ராஜேர தோஷே ராஜ நஷ்ட, கிருஹிணீ தோஷே கிருஹஸ்த நஷ்ட என்று வங்காள மொழியில் ஒரு பழமொழி உள்ளது. நாட்டின் மன்னன் பக்தியின்றி பாவச் செயல்களில் ஈடுபட்டால், அவனது நாடு மகிழ்ச்சியாக இருக்காது, அனைத்தும் பாழாகி விடும்; ஒரு குடும்பத்தில் மனைவி நல்லவளாக இல்லையெனில், அக்குடும்பத்தில் மகிழ்ச்சியோ நல்வாழ்க்கையோ இருக்காது.

எனவே, நாட்டின் மன்னன் பயபக்தி உடையவனாக இருத்தல் அவசியம். மாமன்னர் யுதிஷ்டிரர் தர்மத்திற்கு உட்பட்டு, அதாவது பகவானின் விருப்பத்திற்கேற்ப ஆட்சி செய்து வந்தார். *தர்மம் து ஸாக்ஷாத் பகவத்-ப்ரணீதம்* (ஸ்ரீமத் பாகவதம் 6.3.19) தர்மம் அல்லது மதம் என்றால் முழுமுதற் கடவுளின் ஆணைப்படி நடப்பதே. தர்மத்தை நம்மால் உண்டாக்க இயலாது. "நாங்கள் இந்து," "நாங்கள் முஸ்லிம்," "நாங்கள் கிருஸ்துவர்கள்"—இவையெல்லாம் தர்மம் அல்ல. இவர்கள் யாரும் கடவுள்மீது அக்கறை கொள்வதில்லை, கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றுவதில்லை. கடவுள் என்பவர் யார்? அவருக்கும் நமக்கும் உள்ள உறவு யாது? என்பதைப் பெரும்பாலானோர் அறிவதில்லை. எனவே, தர்மம் எங்குள்ளது? ஸ்ரீமத்



பாகவதத்தில் போலியான தர்மங்கள் அனைத்தும் புறக்கணிக்கப்படுகின்றன. முழுமுதற் கடவுளான கிருஷ்ணரின் கட்டளைப்படி நடப்பதே உண்மையான தர்மம்.

துரியோதனன் உட்பட அவனது அயோக்கிய சகாக்கள் அனைவரையும் அழித்துவிட்டு யுதிஷ்டிரரை மன்னராக நிலைநாட்ட கிருஷ்ணர் குருக்ஷேத்திர யுத்தத்தில் பங்கு கொண்டார். அசுர குணம் கொண்ட அனைவரையும் கொல்லும்படி அவர் கட்டளையிட்டார். பீஷ்மர், துரோணர் போன்றோர் அதர்மத்தின் பக்கம் இருந்ததால், அவர்களையும் கொல்லும்படி கிருஷ்ணர் ஆணையிட்டார். அவ்வாறு கிருஷ்ணரின் ஆணைக்குக் கட்டுப்படுவதே தர்மம். கிருஷ்ணர் கூறுவதைக் கேட்டு அதைப் பின்பற்றினால் அதுவே பக்குவமான தர்மம். *ஸ வை பும்ஸாம் பரோ தர்மோ யதோ பக்திர் அதோக்ஷஜே* (ஸ்ரீமத் பாகவதம் 1.2.6). அதுவே முதல் தரமான மதம்.

## இந்துக்கள் கிருஸ்துவர்களைக் காட்டிலும் சிறந்தவர்களா?

இந்து மதம், கிருஸ்துவ மதத்தை விடச் சிறந்தது என்று நாங்கள் சொல்வதில்லை. இந்து மதம் எவ்வாறு கிறிஸ்துவ மதத்தைவிடச் சிறந்தது? கிருஸ்துவ மதத்தைப் பின்பற்றுவதாகக் கூறுபவர்களும் சரி, இந்து மதத்தைப் பின்பற்றுவதாகக் கூறுபவர்களும் சரி—இருவரும் முட்டாள்களே. நாம் ஏன் ஒரு வகையான அயோக்கியர்களைப் புறக்கணித்து மற்றொரு வகையான அயோக்கியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? நாங்கள் அதுபோன்று செய்வதில்லை. "முஸ்லிம்கள் மற்றும் கிருஸ்துவர் களைக் காட்டிலும் இந்துக்கள் உயர்ந்தவர்கள்" என்றோ, "முஸ்லிம்கள் கிருஸ்துவர்களைவிட உயர்ந்தவர்கள்" என்றோ நாங்கள் கூறுவதில்லை. ஒவ்வொருவரையும் சோதித்துப் பார்த்துதான் நாம் முடிவு செய்ய வேண்டும். ஒருவன் எந்த அளவிற்குத் தன்னை இறைவனிடம் அர்ப்பணித்துள்ளான் என்பதை சோதிக்க வேண்டும். அதன் பின்னர் அவனை ஏற்றுக்கொள்ளலாம்.

நியூயார்க் விமான நிலையத்தில் எங்களைப் பார்த்த ஓர் இளைஞன், என்னிடம் முன்வந்து, "நான் ஒரு கிருஸ்துவன், நான் எனது மதக் கடமைகளை முறையாக அனுசரித்து வருகிறேன்," என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். "இல்லை, இல்லை. நீங்கள் உங்களது மதக் கொள்கைகளை உண்மையாக கடைப்பிடிப்பதில்லை," என்று நான் கூறினேன். அவனுடன் எதையும் பேசாமல், உடனடியாக, "உங்கள் மதத்தை நீங்கள் சரியாகப் பின்பற்றுவதில்லை," என்று நான் கூறியதால், அவன் என்னை வியப்புடன் நோக்கினான். "ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்?" என்றான். "நீங்கள் மாமிசம் உண்பவரா?" என்று நான் கேட்க, "ஆம்," என்று பதிலளித்தான். "நீங்கள் மாமிசம் உண்பவராக இருந்தால், நீங்கள் கிருஸ்துவர் அல்ல. உங்கள் மதத்தின் முதல் கட்டளை 'கொல்லாதிருப்பாயாக' என்பதே. ஆனால் நீங்கள் கொலை செய்வதை ஊக்குவிக்கிறீர்கள். அவ்வாறு இருக்கையில் நீங்கள் எவ்வாறு கிருஸ்துவராக இருக்க முடியும்? நீங்கள் கிருஸ்துவன் அல்ல." ஒவ்வொருவரும் தன்னை ஒரு கிருஸ்துவன், இந்து, முஸ்லிம் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றனர், ஆனால் யாரும் எதையும் முறையாகப் பின்பற்று வதில்லை. அனைத்தும் போலித்தனம்.

இந்த மதத்தைப் பின்பற்றுங்கள், அந்த மதத்தைப் பின்பற்றுங்கள் என்று நாங்கள் கூறுவதில்லை. மதத்தை முறையாகக் கடைப்பிடிப்பவர் கடவுளின் பக்தராக இருப்பார் என்று நாங்கள் கூறுகிறோம். நீங்கள் கடவுளை நேசிக்கத் தொடங்கினால், நற்குணங்கள் அனைத்தும் உங்களை வந்து சேரும். *யஸ்யாஸ்தி பக்திர் பகவத்யகிஞ்சன ஸர்வைர் குணைஸ் தத்ர ஸமாஸதே ஸுரா:* (ஸ்ரீமத் பாகவதம் 5.18.12) இதுதான் சோதனை. ஒருவனிடம் நற்குணங்களை வளர்த்துக் கொள்ளும்படி அறிவுறுத்தத் தேவையில்லை. அவன் கடவுளின் மீது, கிருஷ்ணரின் மீது அன்பு செலுத்தத் தொடங்கினால், தானாகவே அனைத்து நற்குணங்களையும் பெறுவான். கிருஷ்ணரின் குணங்களில் 78 சதவிகித குணங்கள் நம்மிடம் இருப்பதாக கோஸ்வாமிகள் ஆராய்ந்து கூறியுள்ளனர். நீங்கள் கிருஷ்ண பக்தராகும்போது, அக்குணங்கள் உங்களில் வெளிப்படும். நெருப்பின் குணம் இல்லாமல் நெருப்பினுள் நுழைய முடியாது. ஒரு பெரிய மனிதனின் காரிய தரிசியாக வேண்டுமெனில், அதற்கு உண்டான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

நீங்கள் இந்துவா முஸ்லிமா கிருஸ்துவனா என்பது பொருட்டல்ல. கடவுள்மீது அன்புடையவராக, கடவுளின் பக்தனாக, கடவுளுக்காக அனைத்தையும் துறப்பவராக நீங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் உங்களை மதத்தைப் பின்பற்றுபவர் என்று அழைக்கலாம். இல்லாவிடில் மதம் என்ற கேள்விக்கே இடமில்லை.

## மன்னன் கடவுளின் பிரதிநிதி

மாமன்னர் யுதிஷ்டிரர் கிருஷ்ணரிடம் சரணடைந்த தூய்மையான மன்னராக இருந்தார். அத்தகைய மன்னருக்கு நரதேவர் என்று பெயர். அவர் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்படுகிறார். மன்னர் நவாப் ஹுசைன் ஷா, ஸநாதன கோஸ்வாமியிடம்

**ஒவ்வொருவரும் தன்னை ஒரு கிருஸ்துவன், இந்து, முஸ்லிம் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றனர், ஆனால் யாரும் எதையும் முறையாகப் பின்பற்றுவதில்லை. அனைத்தும் போலித்தனம்.**

சைதன்ய மஹாபிரபுவைப் பற்றி விசாரித்தார்: “மன்னர்கள் ஏதேனும் தானம் வழங்கினால், மக்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்வர். ஆனால் இவர் (சைதன்யர்) எதையும் வழங்காதபோதிலும், எங்கெல்லாம் இவர் செல்கிறாரோ, அங்கெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் இவரைப் பின்தொடர்கின்றனர். இவர் சாதாரண நபராக இருக்க முடியாது. இவர் யார்?”

மன்னர் புத்திசாலியாக இருந்ததால் சைதன்ய மஹாபிரபு ஒரு சாதாரண நபரல்ல என்பதைப் புரிந்துகொண்டு, “யார் இவர்?” என்று ஸநாதனரிடம் வினவினார். “நீங்கள் யாரை இறைத் தூதுவராக ஏற்றுக்கொண்டுள்ளீரோ அவரே இவர். இவர் இங்கே வங்காளத்தில் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் பிறந்திருப்பது உங்களது நல்லதிர்ஷ்டம். நீங்கள் இந்த வங்காள நாட்டின் மன்னர், கிருஷ்ணரின் பிரதிநிதி. என்னைக் கேட்பதற்கான அவசியம் என்ன? உங்கள் மனதையே கேளுங்கள். இவர் யார் என்பது உங்களுக்கே புரியும்,” என்று ஸநாதனர் பதிலளித்தார். மன்னர் ஒரு முகமதியர் ஆயிற்றே, அவருக்கு எப்படி இதெல்லாம் தெரியும் என்று அவர் நினைக்கவில்லை. மன்னர் என்பவர் நிச்சயம் கிருஷ்ணரால் ஆசிர்வதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். தான் கடவுளின் பிரதிநிதி என்பதை மன்னரும் நினைத்துப் பார்க்க வேண்டும். மக்களை ஆட்சி செய்யும் கடமையைக் கடவுள் தனக்கு வழங்கியுள்ளதாக எண்ணி, மக்கள் தர்மத்தின் பாதையில் செல்வதற்கும் கிருஷ்ண உணர்வைப் புரிந்துகொள்வ தற்கும் மன்னன் உதவ வேண்டும். அதுவே மன்னனின் தலையாய கடமை.

## மன்னராட்சியும் மக்களாட்சியும்

சமீப காலத்தில் மன்னர்களாக இருந்த அயோக்கியர்கள், “இஃது எனது சொத்து” என்று நினைத்தனர். மக்களிடமிருந்து அதிக வரியை வசூலித்து, மதுவையும் மாதுவையும் அனுபவித்து வந்தனர். ஆதலால் மன்னராட்சி தற்போது முடிந்து விட்டது. ஆனால் மக்களாட்சியினால் மட்டும் என்ன பயன்? முன்பு ஓர் அயோக்கியன், ஆனால் தற்போது நூற்றுக்கணக்கான அயோக்கியர்கள் இதுதான் பலன். நூற்றுக்கணக்கான அயோக்கியர்கள் இணைந்து அரசாங்கத்தை ஏற்படுத்துகின்றனர். கொள்ளையடிப்பதே அவர்களின் தொழில். கயவர்களும் கள்வர்களும் அதிகாரிகளாக மாறி, அதிகமாக சம்பாதித்து அனுபவிக்கின்றனர். இன்றைய அரசாங்கத்தை நினைத்துப் பார்த்தால், மிகவும் மோசமான நிலையில் இருக்கிறோம் என்பதை உணரலாம். “நான் ஏன் அரசாங்கத்திற்கு எதிராக பேசுகிறேன்?” என்று நினைக்கலாம். ஆனால் நான் யுதிஷ்டிர மஹாராஜரின் ஆட்சியையும் இன்றைய ஆட்சியையும் ஒப்பிட்டுக் கூறுகிறேன். நான் எதையும் எனது கற்பனையால் கூறவில்லை. ஒரு மன்னர் சரியானவராக இருந்து தர்மத்தின்படி கடவுளின் முறையான பிரதிநிதியாக இருந்தால், அதன்பின் நாட்டின் தேவைகள் அனைத்தும் தேவைக்கு அதிகமாகவே வழங்கப்படும்.

**தற்போது மன்னராட்சி முடிந்து விட்டது. ஆனால் மக்களாட்சியினால் மட்டும் என்ன பயன்? முன்பு ஓர் அயோக்கியன், ஆனால் தற்போது நூற்றுக்கணக்கான அயோக்கியர்கள்— இதுதான் பலன்.**

## மழை இல்லையேல் மக்கள் இல்லை

சில சமயங்களில் மாம்பழம் அளவிற்கு மீறி விளைந்து, மக்களால் சாப்பிட முடியாத அளவிற்கு அதிகமாக இருக்கும். ஆனால் சில சமயங்களில் மாம்பழமே இருக்காது. ஏன்? இவற்றை வழங்குவதும் வழங்காததும் கிருஷ்ணரிடம் உள்ளது. அவரது பிரதி நிதியான இயற்கை (பூமி), மக்கள் நேர்மையாகவும் இறைவனின் மீது பற்றுதல் கொண்டவர்களாகவும் இருந்தால், தேவையான பொருட்களை தாராளமாக உற்பத்தி செய்து பற்றாக்குறை என்பதே இல்லாத நிலையில் மக்களை வைத்துக் கொள்ளும். எனவே, *காமம் வவர்ஸ பர்ஜன்ய:* என்று இங்கு கூறப்பட்டுள்ளது.

தற்போது வங்காளத்தில் சிறிதளவு மழை பொழிவதைக் காண்கிறோம், இந்தியாவின் வேறு சில இடங்களில் மழை பொழிவதில்லை. சென்றமுறை நான் ஹைதராபாத், அஹமதாபாத் சென்றிருந்தபோது, எல்லா இடங்களும் வறட்சியாகக் காட்சியளித்தன. மும்பையிலும் வறட்சி. மக்கள் மிகவும் வருத்தத்தில் இருந்தனர். மழை இல்லை என்றால், எல்லாம் முடிந்தது. பத்தாண்டுத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டம் என்று நீங்கள் ஏராளமான திட்டங்களைத் தீட்டலாம். ஆனால் அனைத்தும் வறண்டு விடும். இந்த அயோக்கியர்களுக்கு இது தெரிவதில்லை. மழை பொழிவு எவ்வாறு சாத்தியமாகும்? *யக்ஞாத் பவதி பர்ஜன்யோ, பர்ஜன்யாத் அன்ன சம்பவ:,* யாகம் செய்தால் மழை கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

## எவ்வாறு மழையைப் பெறுவது?

மழை என்பது நம்மிடம் இல்லை, ஹைட்ரஜனையும் ஆக்ஸிஜனையும் கலந்து நீரை உருவாக்குவதாக பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்த விஞ்ஞானிகள், மழையை உருவாக்கி பஞ்சத்தைப் போக்கலாமே? ஆனால் அது விஞ்ஞானிகளால் முடியாது. ஆதலால் அத்தகு விஞ்ஞானிகள், தத்துவவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் அனைவரும் அயோக்கியர்களே. நாம் சாஸ்திரங்களின் அறிவுரைகளை ஏற்க வேண்டும். யாகம் செய்தால் மழை கிடைக்கும் என்று பகவத் கீதை கூறுகின்றது. யாகம் என்றால் விஷ்ணுவைத் திருப்தி செய்வதாகும். விஷ்ணுவைத் திருப்தி செய்வதே வாழ்வின் குறிக்கோள்

என்பது இந்த அயோக்கியர்களுக்குத் தெரிவதில்லை. ஏதாவதொரு வழியில் புலன்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் நீங்கள் பகவானைத் திருப்தி செய்யாமல் புலன்களைத் திருப்தி செய்ய இயலாது. நீரோ, தானியமோ, உணவோ இல்லாவிடில், புலன்களை எவ்வாறு திருப்தி செய்வீர்கள்? இறைவனின் புலன்களைத் திருப்தி செய்தால், தானாகவே உங்களின் புலன்கள் திருப்தியடையும். *தஸ்மின் துஷ்டே ஜகத் துஷ்ட:.*

## விலையுயர்ந்த கற்களும் மழையும்

போதுமான மழை இருந்தால், வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும். மழை சரியான அளவில் பொழிந்தால், பூமி அனைத்தையும் உற்பத்தி செய்யும். தானியங்களை மட்டுமின்றி விலையுயர்ந்த கற்களையும் பூமி உற்பத்தி செய்யும். சில ஜோதிடர்கள் இதனை அறிவர். சில குறிப்பிட்ட கிரக அமைப்பின்போது மழை பொழிந்து, அது பாம்பின் தலைமீது விழுந்தால் ஒரு விலையுயர்ந்த கல் உற்பத்தியாகும்; யானையின் மீது விழுந்தால் மற்றொரு கல் உண்டாகும். அதுபோல கடலில் விழுந்தால், முத்துக்கள் உற்பத்தியாகும். இவையனைத்தும் மழையினால் உண்டாகின்றன. நமக்குத் தேவையான ஏராளமான பொருட்களை வழங்க கிருஷ்ணர் தயாராக உள்ளார், இயற்கையும் தயாராக உள்ளது. ஆனால் மக்கள் அதற்குத் தகுதியுடையவர்களாக இல்லை. நீங்கள் பக்தர்களாக இல்லா விடில், கிருஷ்ணர் உங்களுக்குக் கொடுக்க விரும்பினாலும், 'வேண்டாம்' என்று இயற்கை அதனைத் தடுத்துவிடும்.

## மக்கள் பாவிகளாக இருந்தால் மழை வருமா?

பிருது மன்னர் ஆட்சிக்கு வந்தபோது, நாட்டில் வறட்சி இருப்பதைக் கண்டு வளங்களை வழங்கும்படி பூமிக்குக் கட்டளையிட்டார். அவளோ, "ஏன் என் பின்தொடர்கிறீர்கள்? வளங்களைக் கட்டுப்படுத்துவது எனது கடமை. நாட்டில் தற்போது அசுரர்கள் மட்டுமே உள்ளனர். அசுர குணம் படைத்தவர்களுக்கு நான் உணவளிக்க விரும்பவில்லை. பக்தர்களுக்கு மட்டுமே உணவுப் பதார்த்தங்களைக் கொடுக்க நான் விரும்புகிறேன்," என்று எடுத்துரைத்தாள். எப்போது மக்கள் அசுரர்களாக இருக்கின்றார்களோ, அப்போது இயற்கை நமது தேவைகளை முறையாக வழங்காமல் கட்டுப்படுத்தும். அப்போது அங்கே பஞ்சம், கொள்ளை, நோய் என பலவும் பரவும்.

மாமன்னர் யுதிஷ்டிரரின் காலத்தில் அசுரர்களே இல்லை. அவரது வழிவந்த மாமன்னர் பரீக்ஷித்தின் காலத்திலும் அனைத்தும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தன. கலி புருஷன் நாட்டினுள் ஊடுருவ முயன்ற போது, அவர் உடனடியாக அவனைக் கொல்ல முனைந்தார். அப்போது அவரிடம் சரணடைந்த கலி, "மன்னனே, நானும் தங்களின் குடிமகன். எனது செயல்கள் மிகவும் வெறுக்கத்தக்கவை. இருப்பினும் இதுவே எனது இயற்கை. உங்களின் குடிமகனான என்னை நீங்கள் துரத்த நினைப்பது ஏன்? என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை எனில், தாங்களே எனக்குத் தகுந்தபடி ஏதேனும் ஓர் இடத்தைக் கொடுங்கள்," என்று வேண்டினான். அதன்படி, *யத்ர பாபஷ் சதுர்-விதா, ஸ்திரிய: ஸூனா: பான த்யுத.* எங்கெல்லாம் தவறான பாலுறவு, போதை பொருட்கள், மாமிசம், சூதாட்டம் ஆகிய நான்கு விதமான பாவச் செயல்கள் நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம் சென்று வசிக்கும்படி கலி புருஷனுக்கு மன்னர் கட்டளையிட்டார். ஆனால் பரீக்ஷித் மன்னரின் ஆட்சியில் அத்தகு பாவச் செயல்கள் எங்குமே நடைபெறாததால், கலி மிகவும் வருத்தமடைந்தான். தற்போது இப்பாவச் செயல்களை எல்லா இடங்களிலும் காண்கிறோம், பாவிகளின் மத்தியில் மழை பொழிவை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

## தொழிற்சாலைகள் தேவையில்லை

மாமன்னர் யுதிஷ்டிரர் இறையன்பு உடையவராக இருந்ததால், அவரது ஆட்சியில், *காமம் வவர்ஷ பர்ஜன்ய,* முறையான மழை பொழிவு



எங்கெல்லாம் தவறான பாலுறவு, போதை பொருட்கள், மாமிசம், சூதாட்டம் ஆகிய நான்கு விதமான பாவச் செயல்கள் நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம் சென்று வசிக்கும்படி கலி புருஷனுக்கு மன்னர் பரீக்ஷித் கட்டளையிட்டார்.

இருந்தது, அனைத்தும் நன்றாக உற்பத்தியாயின. *ஸர்வ காம துகா மஹீ*, தொழிற்சாலைகளும் மாபெரும் வாணிபமும் உங்களுக்குத் தேவையில்லை. உங்களிடம் சிறிது நிலமும் பசுவும் இருந்தால் எல்லாம் பூர்த்தியாகிறது. இதுவே வேதப் பண்பாட்டின் அடிப்படைக் கொள்கை. சிறிது நிலமும் சில பசுக்களும் போதும்; *தான்யேன தனவான் கவய:* செல்வந்தனாக ஆவதற்கு தானியங்கள் போதும், தொழிற்சாலை தேவையில்லை. தற்போதுள்ள பெரிய பெரிய தொழிற்சாலைகள் அசுரர்களின் செயல்கள், *உக்ர-கர்மம்.* அனைத்து மக்களும் மெதுவாக நகரங்களுக்கு இடம்பெயரத் தொடங்கிவிட்டனர், அப்பாவிகளான கிராமத்து மக்களை முதலாளிகள் நகரத்திற்கு அழைத்து வந்து இரும்புக் கம்பிகளையும் இரும்புப் பொருட்களையும் உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்துகின்றனர். கை நிறைய சம்பாதிப்பதாக அம்மக்களும் நினைக்கின்றனர். ஆனால் அச்சம்பளத்தினால் என்ன பயன்? ஒருபுறம் கை நிறைய வருமானம், மறுபுறம் ஒரு கிலோ அரிசியின் விலை உச்சத்தில் உள்ளது. வருமானம் அனைத்தும் தீர்ந்துவிடுகிறது. ஒவ்வொருவரும் அவரவரது உணவை உற்பத்தி செய்ய வேண்டும். சிறிது நிலத்தை வைத்து உணவை உற்பத்தி செய்யட்டும். அங்கே பசுக்களும் இருந்தால், அனைவரும் மகிழ்ச்சியாக வாழலாம்.

## பசுக்களைக் கொல்லாதீர்

யுதிஷ்டிரரின் ஆட்சியில் பசுக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. கொல்லப்படுவோமா என்ற பயம் அவற்றிடம் இல்லை. மிருகங்களுக்கும் உணர்வு இருப்பதை நாம் கண்டுள்ளோம். உங்களது நாட்டில் (அமெரிக்க ஐரோப்பாவில்) பொதுவாக எல்லா பசுக்களும் அழுவதை நான் பார்த்துள்ளேன். ஏனெனில், அவற்றின் கண்ணெதிரே அனைத்துக் கன்றுகளும் கொல்லப்படுகின்றன. பசுக்களை வாங்குவோர் கன்றுகளைத் தனியாக எடுத்துச் சென்றுவிட்டால், பசுக்கள் அழுது கொண்டே இருக்கும், கண்ணீர் அவற்றின் கண்களில் தொடர்ந்து வழிந்து கொண்டே இருக்கும். தானும் ஒருநாள் கொல்லப்படுவோம் என்பதை அறிந்த அப்பசுக்கள் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. விரைவில் கொல்லப்படுவோம் என்பதை அறிந்த யாரால் மகிழ்ச்சியாக இருக்க முடியும்? ஜெர்மனியில் இருந்த கான்சென்ட்ரேஷன் கேம்ப்பிற்கு யாரேனும் அழைத்துச் செல்லப்பட்டால், விரைவில் கொல்லப்பட்டு விடுவேன் என்பதை அவன் அறிவான். அப்போது அவன் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்? உங்களைக் கொல்லப் போகிறார்கள் என்பதை அறிவித்துவிட்டு, பாசறையில் வைத்திருந்தால் மகிழ்ச்சியாக இருப்பீர்களா? நிச்சயம் இல்லை.

**ஜெர்மனியில் இருந்த கான்சென்ட்ரேஷன் கேம்ப்பிற்கு யாரேனும் அழைத்துச் செல்லப்பட்டால், விரைவில் கொல்லப்பட்டு விடுவேன் என்பதை அவன் அறிவான். அப்போது அவன் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்? உங்களைக் கொல்லப் போகிறார்கள் என்பதை அறிவித்துவிட்டு, பாசறையில் வைத்திருந்தால் மகிழ்ச்சியாக இருப்பீர்களா? நிச்சயம் இல்லை.**

அதுபோல பசுக்களைக் கசாப்புக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லும் போது, “இந்த அயோக்கியன் என்னை எந்த நேரமும் கொல்வான்,” என்பதை அவை புரிந்துகொள்ளும். அவை எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்? பசுக்கள் மகிழ்ச்சியாக இருந்தால், உங்களுடைய தேவைக்கு அதிகமாகவே கிட்டும். குடிப்பதற்கு மட்டுமல்ல, விளை நிலம்கூட பாலால் ஈரப்பதம் அடையும்—அந்த அளவிற்கு பால் விநியோகம் இருக்கும். பசுக்கள் கடந்து செல்லும்போது, வழிமுழுவதும் பாலால் ஈரப்பதம் அடையும். கிருஷ்ணர் தன்னுடைய லீலைகளை அரங்கேற்றியபோது, பால் விநியோகம் அளவுக்கதிகமாக இருந்தது. வெண்ணெய், தயிர், பால் பொருட்கள் என அனைத்தும் அதிகமாக இருந்தன, கிருஷ்ணர் அவற்றை குரங்குகளுக்குகூட வழங்குவார். “குரங்கே இங்கு வா, இதனை எடுத்துக்கொள்,” என்று அவர் குரங்குகளுக்கும் வெண்ணெய் கொடுப்பார். நாம் கிருஷ்ணரைப் பின்பற்றினால், கிருஷ்ணரின் அருளால், பால் உற்பத்தி பெருகி அனைவரும் பால் பொருட்களைப் பெற முடியும்—மிருகங்களும் வெண்ணெய், தயிர் என்று சாப்பிடலாம். இதுவே நமக்குத் தேவை, இதுவே உண்மையான நாகரிகம்.

போதிய அளவு தானியங்களை உற்பத்தி செய்யுங்கள், பசுக்கள் போதிய அளவு பாலைக் கொடுக்கும். எல்லா பொருளாதார கேள்விகளுக்கும் விடை கிட்டும். தொழிற்சாலைகளால் எந்த பிரயோஜனமும் இல்லை. ஐம்பது மைல் பயணம் செய்து வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நிலமும் பசுக்களும் இருந்தால் போதும். அனைத்தும் நிலத்திலிருந்தே கிடைக்கும். விலையுயர்ந்த பொருட்கள், மருந்துப் பொருட்கள், கனிமங்கள், தங்கம், வைரம் என அனைத்தும் கிடைக்கும்—அனைத்தும் பூமியிலிருந்து தானே உற்பத்தியாகின்றன. உங்களது நாகரிகத்தைப் பக்குவமாக்குங்கள், கிருஷ்ணரை திருப்தி செய்தால் போதும், மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெறலாம். இதுவே கிருஷ்ண பக்தி இயக்கம்.

*(தமிழாக்கம்: விஜய தேவி தாஸி)*

# உண்ணாவிரதம் உண்மையும் போலியும்



வழங்கியவர்: ஸ்ரீ கேசவ தாஸ்

உண்ணாவிரதம்—கடந்த சில மாதங்களாக மக்களின் காதுகளில் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கும் ஒரு வார்த்தை. நாட்டில் வழக்கம் போல எத்தனையோ பிரச்சனைகள்; பிரச்சனைகளுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்குபவர்களில் சிலர் உண்ணா விரதம் என்பதை கையிலெடுத்துக் கொள்கின்றனர். அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தல், சமுதாய நன்மையைப் பாதுகாத்தல், மக்கள் பிரச்சனைகளை எடுத்துரைத்தல் போன்ற பல்வேறு காரணங்களை முன்வைத்து அரசியல்வாதிகள், ஆட்சி யாளர்கள், ஆன்மீகவாதிகள் (?), தொண்டு நிறுவனங்கள் என்று பலரும் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு அடிக்கடி நிகழும் உண்ணாவிரதப் போராட் டத்தைத் தடுப்பதற்காக எவரேனும் உண்ணாவிரதம் இருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. உண்ணாவிரதம் என்னும் உயர்ந்த கொள்கை இத்தகையோரால் கேலிக் கூத்தாக மாறி வருவது வருந்தத்தக்க உண்மை. உண்ணாவிரதம் என்பது எதற்காக இருக்க வேண்டும், உண்ணா விரதத்தின் வகைகள் யாவை, செயற்கையான உண்ணாவிரதம் யாது என்பன போன்ற தகவல்களைச் சற்று ஆராய்வோம்.

## உண்ணாவிரதம்—ஓர் அடிப்படை விளக்கம்

மனிதனாகப் பிறவியெடுத்தோர் ஒவ்வொருவரும், "நான் இந்த உடலல்ல, ஆத்மா" என்பதை உணர்ந்து, "உடல் சார்ந்தவை அனைத்தும் தனக்குரியவை" என்னும் அறியாமையிலிருந்து விடுபட வேண்டும். மனிதர்களை அத்தகு நிலைக்கு உயர்த்தும் பொருட்டு, கர்ம யோகம், ஞான யோகம், தியான யோகம், பக்தி யோகம் என்னும் நான்கு யோக முறைகள் வேத சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு யோக முறைகளிலும், தர்மத்தின் நான்கு தூண்களில் ஒன்றான தவம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் பெறுவதற்காக, புலனின்பச் செயல்களை விருப்பத்துடன் குறைத்துக் கொள்வதே "தவம்" எனப்படுகிறது. காட்டில் வசித்தல், கிடைக்கும் உணவை உட்கொள்ளுதல், ஒற்றைக் காலில் நிற்றல், உறக்கத்தைக் குறைத்தல், உணவைக் குறைத்தல், குளிர், வெப்பம், மழை, போன்றவற்றை சகித்துக் கொள்ளுதல் போன்றவை ஆன்மீக நன்மைக்காகச் செய்யப்படும்போது, அவை தவம் எனப்படுகின்றன.

பள்ளியில் நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்பதற்காக தங்களுடைய உறக்கத்தைக் குறைத்து பாடம் படிக்கும் மாணவர்கள் ஏராளம். அம்மாணவர்கள் தங்களது ஒரு புலனின்பத்தை மற்றொரு புலனின்பத்திற்காகக் கைவிடுகின்றனர். அத்தகு செயல் தவமாகாது. மாறாக, யாரேனும் ஒருவர் இறைவனின் திருப்திக்காக தமது உறக்கத்தைக் குறைத்து, நேரத்தை ஆன்மீகச் செயல்களில் ஈடுபடுத்தினால், அது தவம் எனப்படுகிறது. கிருஷ்ண உணர்வு என்னும் விஞ்ஞானத்தில் முன்னேறும் பொருட்டு, வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள தவங்களை (அவை உடலுக்குத் துன்பத்தைக் கொடுத்தாலும்) ஏற்றுக்கொள்ள வேண்டும். வேத நெறிகளுக்கு எதிராகவோ தேவையற்ற முறையிலோ தவங்களையும் விரதங் களையும் மேற்கொள்ளுதல் கூடாது.

வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள தவங்களில், உபவாசம் எனப்படும் உண்ணாவிரதமும் ஒன்றாகும். யோகத்தைப் பயிற்சி செய்யும் அனைத்து பிரிவினரும் தமது உணவைக் குறைத்துக்கொள்ளுதல் தொன்றுதொட்டு வரும் வழக்கம். ஆனால் உணவைக் குறைத்தல் என்பது அவர்களின் அன்றாடச் செயல்களை எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது. அவ்வாறு பாதித்தால், அத்தகைய உண்ணாவிரதத்தினால் பூரண பலனை அடைய முடியாது. பொதுவாக, ஆன்மீகப் பாதையை ஏற்பவர்கள் தங்களது உணவைக் குறைப்பதற்கு படிப்படியாக பயிற்சியளிக்கப்படுவர். அதிகமாக உண்பவனும் சரி, குறைவாக உண்பவனும் சரி, யோகியாக முடியாது என்று பகவத் கீதையில் (6.16) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியுள்ளார்.

பல்வேறு பிரச்சனைகளைக் கொண்ட கலி யுகத்தில் கர்ம யோகம், ஞான யோகம், தியான யோகம் ஆகிய வழிமுறைகள் பொருந்தாதவை. ஒரே தீர்வான ஹரி நாம சங்கீர்த்தனத்தை அடிப்படையாகக் கொண்ட பக்தி யோக வழிமுறையின்படி, உபவாசம் என்பது பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அர்ப்பணிக்கப்பட்ட உணவை (பிரசாதத்தை) மட்டுமே உண்பது என்ற நிலையில் உறுதியாக இருப்பதன் மூலமும், சில குறிப்பிட்ட தினங்களில் உண்ணாவிரதம் அனுசரிப்பதன் மூலமாகவும் அடையப்படுகிறது. அவ்வாறு உண்ணாவிரதம் அனுசரிப்பவன் யோகப் பயிற்சியில் பக்குவமடைந்து கிருஷ்ண உணர்வில் நிலைபெறுகிறான்.

உணவின்றி பட்டினி கிடப்பவனுக்கு புலன்களைத் திருப்திசெய்யும் ஆசை மேன்மேலும் அதிகரிக்கக்கூடும். "வயிறு நிறையும்போது இதயம் நிறைகிறது" என்று தென் அமெரிக்காவில் ஒரு பழமொழி உண்டு. போதுமான அளவு உண்பவன் மகிழ்ச்சியாக இருப்பான், ஆனால் அளவிற்கு அதிகமாக உண்பவனும் அளவிற்குக் குறைவாக உண்பவனும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. உணவு கிடைக்காதவன் எப்போதும் உணவையே நினைத்து, நாவிற்கு அடிமையாகவே இருப்பான். எனவே, கிருஷ்ண பிரசாதத்தை மட்டும் உண்ணுதல் என்னும் நடைமுறைக்கு ஏற்ற தவத்தின் மூலம், ஒருவனின் இதயம் படிப்படியாகத் தூய்மையடைந்து, அவன் பக்குவநிலையை அடைய முடியும்.

## உண்ணாவிரதம் இருப்பதற்கான காலம்

கர்ம யோகத்தைப் பயிற்சி செய்வோர் பின்பற்ற வேண்டிய நியமங்கள் பற்பல. உதாரணமாக, தினமும் உணவு உண்பதற்கு முன்பு வெளியில் சென்று, "யாரேனும் பசியுடன் உள்ளீரா" என்று மூன்று முறை கூவி அழைக்க வேண்டும். அவ்வாறு பசியுடன் வருபவர்களுக்கு உணவளித்துவிட்டு மீதி இருந்தால் மட்டுமே ஓர் இல்லறத்தான் உண்ண வேண்டும். இல்லாவிடில் அன்றைய தினம் பட்டினி கிடக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. மேலும், அமாவாசை, பௌர்ணமி என்று பல்வேறு நாள்களிலும் விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். இதுபோன்ற பல்வேறு நெறிமுறைகள் இன்றைய காலத்திற்கு ஒத்துவராதவை.

பக்தி யோகத்தின்படி, வளர்பிறை மற்றும் தேய்பிறையின் பதினொன்றாம் நாளில், அதாவது ஏகாதசி திதி அன்று விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. மேலும், கிருஷ்ண ஜென்மாஷ்டமி, ராம நவமி, நரசிம்ம சதுர்தசி போன்ற பகவானின் அவதார தினங்களிலும் ஆச்சாரியர்களின் தோற்றம் மற்றும் மறைவு தினங்களிலும் உண்ணாவிரதம் இருப்பது பரிந்துரை செய்யப்படுகிறது. ஏகாதசி விரதத்தின் முக்கிய குறிக்கோள், உண்ணாமல் இருப்பது அல்ல; மாறாக, உடல் தேவைகளைக் குறைத்துக் கொண்டு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீதான அன்பை வளர்க்கும் பொருட்டு, திருநாமங்களை ஜெபித்தல், அவரது தெய்வீக லீலைகளைக் கேட்டல் போன்றவற்றிற்கு நேரத்தை செலவிடுவதே என்று பிரம்ம வைவர்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

மாதத்திற்கு இருமுறை வரும் ஏகாதசியன்று விரதம் இருத்தல் அனைத்து பக்தர்களுக்கும் அவசிய மானதாகும். சில பக்தர்கள் நீர்கூட அருந்தாமல் விரதம் இருப்பர்; சிலர் நீர் மட்டும் அருந்துவர்; சிலர் பால், பழங்களை ஏற்றுக்கொள்வர்; மற்ற பக்தர்கள் குறைந்தபட்சம் தானியங்கள், பயிறு வகைகள், பீன்ஸ் போன்ற காய்கள், கடுகு போன்றவற்றைத் தவிர்த்து விரதம் மேற்கொள்வர்.

**மானம், மரியாதை, மற்றும் வழிபாட்டை எதிர்பார்த்து தற்பெருமையுடன் செய்யப்படும் விரதங்கள் ரஜோ குணத்தின் விரதங்கள் எனப்படுகின்றன. பிறரை அழிப்பதற்காக, துன்புறுத்துவதற்காக, அல்லது தன்னையே வருத்திக் கொண்டு முட்டாள்தனமான முறையில் செய்யப்படும் விரதங்கள், தமோ குணத்தின் விரதங்கள் என்று அறியப்படுகின்றன.**

## உண்ணாவிரதத்தில் மூன்று வகை

பகவத் கீதையின் பதினேழாவது அத்தியாயத்தில் முக்குணங்களின் அடிப்படையிலான மூன்று விதமான விரதங்கள் விளக்கப்பட்டுள்ளன. எந்தவொரு இலாபத்தையும் எதிர்பார்க் காமல், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைத் திருப்திசெய்வதற்காக உன்னதநம்பிக்கை யுடன் செய்யப்படும் விரதங்கள், ஸத்வ குணத்தின் விரதங்கள் எனப்படுகின்றன. மானம், மரியாதை, மற்றும் வழிபாட்டை எதிர்பார்த்து தற்பெருமையுடன் செய்யப் படும் விரதங்கள் ரஜோ குணத்தின் விரதங்கள் எனப்படுகின்றன. பிறரை அழிப்பதற்காக, துன்புறுத்துவதற்காக, அல்லது தன்னையே வருத்திக்

கொண்டு முட்டாள்தனமான முறையில் செய்யப்படும் விரதங்கள், தமோ குணத்தின் விரதங்கள் என்று அறியப்படு கின்றன. உண்மையான நன்மையைப் பெற விரும்புவோர் ஸத்வ குணத்தின் விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்; ஏனெனில், ஸத்வ குணம் மட்டுமே உயர்வு பெற உதவும்.

“காமம் மற்றும் பற்றுதலினால் உந்தப்பட்டு, சாஸ்திரங்களில் பரிந்துரைக் கப்படாத கடுமையான விரதங்களை தற்பெருமையுடனும் கர்வத்துடனும் செய்பவர்கள் உடலைத் துன்புறுத்துவது மட்டுமின்றி, உள்ளே உறைந்துள்ள பரமாத்மாவையும் துன்புறுத்துகிறார்கள். அத்தகு முட்டாள்கள் அசுரர்களாக அறியப்பட வேண்டும்.” (பகவத் கீதை 17.5-6)

இந்த ஸ்லோகத்திற்கான ஸ்ரீல பிரபுபாதரின் பொருளுரையிலிருந்து சில வரிகள்: “சாஸ்திரங்களில், உண்ணாவிரதம் என்பது ஆன்மீக முன்னேற்றத்திற்காகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது, சில அரசியல் நோக்கத் திற்காகவோ சமூக இலக்கிற்காகவோ அல்ல. அத்தகு விரதங்களை ஏற்பவர்கள் பகவத் கீதையின்படி நிச்சயமாக அசுரத் தன்மையுடையவர்கள். மேலும், இவற்றால் பொதுமக்களுக்கு எவ்வித நன்மையும் உண்டாகாது. உண்மையில், தற்பெருமை, கர்வம், காமம், பௌதிக இன்பத்திற்கான பற்றுதல் ஆகியவற்றால் இவர்கள் செயல்படுகின்றனர்... அரசியலைக் குறிக் கோளாகக் கொண்ட அத்தகு விரதங்களும் தவங்களும் மற்றவர்களுக்கு மிகவும் தொல்லை கொடுப்பது நிச்சயம்... தனது எதிரியையோ இதர கட்சியின ரையோ இத்தகு முறையினால் தனது விருப்பத்திற்கு உடன்படும்படி வலியுறுத்தலாம் என்று அசுரத்தனமான மனிதன் நினைக்கலாம், ஆனால் சில சமயங்களில் இத்தகு விரதத்தினால் ஒருவன் மரணமடையவும் கூடும். இத்தகு செயல்களை பரம புருஷ பகவான் அனுமதிப்பதில்லை. மேலும், இவ்வாறு ஈடுபடுபவர்களை அசுரர்கள் என்று அவர் கூறுகின்றார்.”

## பிராயசித்த உண்ணாவிரதம்

ஒருவன் தான் செய்த தவறுக்கு பிராயசித்தமாக உண்ணாவிரதம் இருப்பதும் வேத காலத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு வழிமுறையாகும். இதர ஜீவன்கள், வைஷ்ணவர்கள் அல்லது முழுமுதற் கடவுளுக்கு எதிராக ஒருவன் ஏதேனும் குற்றம் செய்துவிட்டால், அதற்கு பிராயசித்தமாக அதாவது பரிகாரமாக உண்ணாவிரதம் இருத்தல் உகந்ததாகும். உதாரணமாக, காம எண்ணத்துடன் ஒரு பெண்ணைப் பார்த்த காரணத்திற்காக சோட்டா ஹரிதாஸர் என்னும் தனது சீடனை சைதன்ய மஹாபிரபு தனது சங்கத்திலிருந்து ஒதுக்கி வைத்தபோது, தான் செய்த குற்றத்திற்கு பிராயசித்தமாக சோட்டா ஹரிதாஸர் உண்ணாவிரதம் ஏற்றதை நாம் சைதன்ய சரிதாம்ருதத்தில் (அந்திய லீலை 11.19) காணலாம்.

## சாகும் வரை உண்ணாவிரதம்

மரணத்தை நெருங்கிய பக்தர்கள், இவ்வுலகில் தங்களுக்கு எஞ்சியுள்ள நாள்களை பூரண கிருஷ்ண உணர்வில் கழிக்கும் பொருட்டு, எந்த உணவையும் ஏற்றுக்கொள்ளாமல், மரண நேரம் வரை உண்ணாவிரதம் இருத்தல், *ப்ராய உபவேஷம்* எனப்படும்.

ஏழு நாள்களில் இறக்கப் போகிறோம் என்பதை அறிந்த பரீக்ஷித் மஹாராஜர், உடனடியாக *ப்ராய உபவேஷத்தை* ஏற்று எஞ்சிய நாள்களை முழுமையான கிருஷ்ண பக்தியில் ஈடுபடுத்துவதற்காக கங்கைக் கரையை அடைந்தார். அங்கு அவர் ஏழு நாள்களுக்குத் தொடர்ந்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய உயர்ந்த இலக்கியமான ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டு, அதன் பின்னர் தனது உடலை நீத்தார். (இப்பத்திரிகையின் அட்டைப்படத்திலும் இக்கட்டுரையின் தொடக்கத்திலும் கொடுக்கப்பட்டுள்ள படம், மன்னர் பரீக்ஷித் உபவாசம் இருந்தபடி பாகவதம் கேட்டதை சித்தரிக்கும் படம்) இஸ்கான் இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதரும் தனது வாழ்வின் இறுதி நாள்களில் *ப்ராய உபவேஷம்* மேற்கொண்டு உடலை நீத்தார்.

## உண்ணாவிரதத்தின் தன்மைகள்

உண்ணாவிரதம் கிருஷ்ணரை மறந்து உடலை நினைப்பதற்காக அல்ல. அத்தகைய உண்ணாவிரதத்தை அனுசரிக்காமல் இருப்பதே நன்று. சுகதேவ கோஸ்வாமியின் கடல் போன்ற திருவாயிலிருந்து பெருகிய அமிர்தம் போன்ற பகவத் செய்தியைப் பருகிக் கொண்டிருந்த காரணத்தினால், உண்ணாவிரதத்தின் எந்தவொரு சோர்வையும் தான் உணரவில்லை என்று பரீக்ஷித் மன்னர் ஸ்ரீமத் பாகவதத்தில் கூறியுள்ளார். இதுவே உண்ணாவிரதத்தின் தன்மை. உண்ணாவிரதம் இருப்போர் உடல் தேவையினால் அலைக்கழிக்கப்பட்டால், அத்தகைய உண்ணாவிரதம் அவசியமற்றதாகும்.

மிகப்பெரிய ஜமீன்தாரின் குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலும், ரகுநாத தாஸ கோஸ்வாமி இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு ஒருமுறை கையளவு மோர் மட்டுமே பருகி வந்தார். இருப்பினும் அவர் தனது அன்றாட பக்தி செயல்களில் துளியும் பிறழவில்லை. ராதா குண்டத்தில் மூன்று முறை குளித்தல், ஆயிரம் முறை

**கடுமையான விரதங்களை அனுசரிக்க விரும்புவோர், ரகுநாத தாஸ கோஸ்வாமியைப் போன்று தொடர்ந்து தங்களது சேவையைச் செய்ய முடிந்தால் நிச்சயம் அனுசரிக்கலாம் என்றும், அவ்வாறு செய்ய இயலாதவர்கள் அவரை நகல் செய்ய முயற்சிக்கக் கூடாது என்றும் ஸ்ரீல பிரபுபாதர் நம்மை எச்சரித்துள்ளார்.**

கிருஷ்ணரை விழுந்து நமஸ்கரித்தல், இரண்டாயிரம் முறை வைஷ்ணவர்களை விழுந்து நமஸ்கரித்தல், கோவர்தன மலையைச் சுற்றி வருதல் (சுமார் 23 கிலோமீட்டர்), 64 மாலைகள் ஹரி நாம ஜபம் செய்தல்—இவையாவும் அவரது தினசரி ஆன்மீகப் பயிற்சிகள். கையளவு மோர் மட்டும் பருகியதால், அவர் களைப்படைந்து உறங்கவில்லை.

கடுமையான விரதங்களை அனுசரிக்க விரும்புவோர், ரகுநாத தாஸ கோஸ்வாமியைப் போன்று தொடர்ந்து தங்களது சேவையைச் செய்ய முடிந்தால் நிச்சயம் அனுசரிக்கலாம் என்றும், அவ்வாறு செய்ய இயலாதவர்கள் அவரை நகல் செய்ய முயற்சிக்கக் கூடாது என்றும் ஸ்ரீல பிரபுபாதர் நம்மை எச்சரித்துள்ளார்.


## கடுமையான உண்ணாவிரதம்


பக்தி யோகத்தைப் பயிற்சி செய்பவர்கள், பொதுவாக கடுமையான உண்ணாவிரதங்களைக் கடைப்பிடிக்க மாட்டார்கள் என்றபோதிலும், அரிய நேரங்களில் அவர்கள் கடும் உண்ணாவிரதத்தை மேற்கொள்வதும் உண்டு. அவர்களின் உண்ணாவிரதம் நிச்சயம் பகவானைத் திருப்திசெய்வதற்காகவே அமையும். துருவ மன்னர் ஐந்து வயது நிரம்பிய சிறுவனாக இருந்தபோது, நாரத முனிவரின் உபதேசத்தின்படி மதுவனம் என்னும் காட்டை அடைந்து கடுந்தவத்தை மேற்கொண்டார். முதல் மாதத்தில் மூன்று நாள்களுக்கு ஒருமுறை பழங்களை உண்டும், இரண்டாம் மாதத்தில் ஆறு நாள்களுக்கு ஒருமுறை காய்ந்த சருகுகளை உண்டும், மூன்றாம் மாதத்தில் ஒன்பது நாள்களுக்கு ஒருமுறை நீரைப் பருகியும், நான்காம் மாதத்தில் பன்னிரண்டு நாள்களுக்கு ஒருமுறை காற்றை சுவாசித்தும் அவர் விரதம் மேற்கொண்டார்.

பக்தர்களின் வாழ்வில் உண்ணாவிரதம் என்பது முக்கிய மானதல்ல—கிருஷ்ணரின் மீதான நினைவு (ஸ்மரணம்) மட்டுமே முக்கியமானதாகும். கிருஷ்ண பக்தர்கள் யாரையும் அவர்களது உண்ணாவிரதத்தை வைத்து நாம் பக்தர்களாகக் கருதுவதில்லை, அவர்களது பக்தியை வைத்து பக்தர்களாகக் கருதப்படுகின்றனர்.

## கடும் உண்ணாவிரதம் மேற்கொண்ட அசுரர்கள்

பல்வேறு அசுரர்களும் தங்களது உடலை வருத்தி, கடுந் தவங்களையும் உண்ணாவிரதங்களையும் மேற்கொண்டதை நாம் வரலாற்றில் காண்கிறோம். உண்மையில் பார்த்தால், கடுந்தவம் புரிந்தவர்களில் பக்தர்களைக் காட்டிலும்





பிரம்மதேவரை நோக்கிய ஹிரண்யகசிபுவின் தவமும் பகவான் விஷ்ணுவை நோக்கிய துருவனின் தவமும் முற்றிலும் வேறுபட்டவை. ஒன்று அசுரத்தனமான தவம், மற்றது தெய்வீகமான தவம்.

அசுரர்களே அதிகம். ஆயிரமாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்த ஹிரண்யகசிபு தனது உண்ணாவிரதத்தினால் தேவர்களையும் நடுங்கச் செய்தான். பல்வேறு அசுரர்கள் தங்களது உண்ணாவிரதத்தினால் வேண்டிய பலனைப் பெற்றதையும் அதன் பின்னர் தேவர்களால் அழிக்கப்பட்டதையும் நாம் புராணங்களில் காண்கிறோம்.

அசுரர்களுடைய உண்ணாவிரதம் ஆன்மீக நோக்கத்திற்கானது அல்ல; தங்களது எதிரியை அழிக்க வேண்டும், அல்லது எதிரியை அழிப்பதற்கான சக்தியைப் பெற வேண்டும்—இதுவே குறிக்கோள். அன்றைய அசுரர்களைப் போன்று ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடுமையான விரதத்தினை இன்றைய உலகில் உண்ணாவிரதம் இருப்பவர்கள் மேற்கொள்வதில்லை, சில நாள்கள் சொகுசான உண்ணாவிரதத்தை மேற்கொள்கின்றனர். ஆனால் இருவருடைய குறிக்கோளும் ஒன்றுதான்—எதிரிகளை அழிக்க வேண்டும் என்பதே. மேலோட்டமாகப் பார்த்தால், இவர்கள் வயிற்றைக் கட்டுப்படுத்துவதுபோலத் தோன்றினாலும், இவற்றின் அடிப்படை புலனுகர்ச்சியே.

## பயனற்ற உண்ணாவிரதங்கள்

ஆன்மீக காரணங்கள் ஏதுமின்றி, இதர காரணங்கள் எதுவாக இருந்தாலும், அதற்காக அனுசரிக்கப்படும் உண்ணா விரதங்கள் செயற்கையானவை. அவை சாஸ்திரங்களில் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒரு நற்செயலை அங்கீகரிக்கப்படாத முறையில் செய்வோர், அச்செயலின் மதிப்பைக் குறைத்து, அதனைக் கேலிக்கூத்தாக மாற்றி விடுகின்றனர்.

ஆன்மீக நன்மைக்காக உண்ணாவிரதம் மேற்கொள் பவர்கள் அதற்கான பலனை நிச்சயம் அடைவர். பௌதிக நன்மைக்காக உண்ணாவிரதம் மேற்கொள்பவர்கள் பெரும் பாலான நேரங்களில் விரும்பிய பலனை அடைவதற்கு முன்பே தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வது வழக்கம். அவர்களது உண்ணாவிரதங்கள் புகழைக் கொடுக்கலாம், பிரச்சனைக்கான தீர்வைக் கொடுப்பதில்லை.

பல்வேறு சமுதாயப் பிரச்சனைகளை முன்னிறுத்தி "சாகும் வரை உண்ணாவிரதம்" இருந்தோர் பலர். அவற்றில் பல உண்ணாவிரதங்கள் யாரேனும் ஒருவரின் வாக்குறுதியை ஏற்று கைவிடப்படுவதும், அந்த வாக்குறுதிகள் நிறைவேறாமல் போவதும் நம் வாழ்வில் அவ்வப்போது காணக்கூடிய ஒன்றாகும். உண்ணாவிரதம் இருந்து சிலர் மடிந்துள்ளனர் என்பதும் உண்மை, அத்தகைய மரணம் தற்கொலைக்கு சமமானது, சட்டத்திற்கு விரோதமானது—ஆனால் பிரச்சனை தீர்ந்ததா? நிச்சயம் இல்லை.

எனவே, உண்ணாவிரதம் என்னும் புனிதமான பயிற்சியினை ஆன்மீகம் என்னும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் விட்டுவிட்டு, மற்றவர்கள் வேறு உபாயத்தைத் தேடினால் சிறப்பாக அமையும்.

*திரு. ஸ்ரீ கேசவ தாஸ் அவர்கள், ஓவியராகவும் வடிவமைப்பாளராகவும் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியை சென்னையில் பயிற்சி செய்து வருகிறார்.*

## முட்டாள்தனமான உண்ணாவிரதம்



**அக்ஷயானந்தர்:** திரு.______ அவர்கள் பசுவதையை நிறுத்து வதற்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறார். இதுகுறித்து நீண்ட நாட்களாக தங்களிடம் கேட்க விரும்பினேன். ஒருவேளை அவர் மரணமடைந்துவிட்டால், அவர் கொலைக் குற்றத்திற்கு உள்ளாவார் என்று நினைக்கிறேன். சரியா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். நீங்கள் சொல்வது சரியே

**அக்ஷயானந்தர்:** அத்தகைய உண்ணாவிரதத்தினால் என்ன இலாபம்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** என்ன இலாபம்? அவர் பட்டினி கிடந்து மடிந்தால் பசுவதை நின்றுவிடுமா? அஃது அவரது முட்டாள்தனம்.

**அக்ஷயானந்தர்:** அவர் இறந்த பின்னரும் பசுவதை தொடரும். எங்கு செல்கிறோம் என்பதை அறியாமலேயே அவர் இறந்துவிடுவார்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பாருங்கள்! அவர் எவ்வளவு பெரிய மனிதர், ஆனால் எவ்வளவு பெரிய முட்டாளாக உள்ளார்? தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் செய்து வருகிறார்.

—செப்டம்பர் 6, 1976, விருந்தாவனம்


நன்றி கெட்ட நபர்கள்
தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் வழங்கப்பட்ட உபதேச கதை
www.iskcondesiretree.com
பக்திமானாகத் திகழ்ந்த மன்னர் ஒருவர் தனது மந்திரிகள் மற்றும் அரசவையில் இருந்தவர்களின் நடத்தையைக் கண்டு மிகவும் வருத்தமடைந்தார்.
அந்த உயர்குடி மக்கள், உணவு உண்பதற்கு முன்பு கடவுளிடத்தில் பிரார்த்தனை செய்வதில்லை என்பதையும், உணவை அப்படியே எடுத்து உண்ண ஆரம்பித்துவிடுகின்றனர் என்பதையும் அரசவையில் விருந்து நடந்தபோதெல்லாம் மன்னர் கவனித்தார்.
எப்போதும் சிரித்துப் பேசி மகிழ்ந்த அவர்கள், ஒருபோதும் உணவளித்ததற்காக கடவுளுக்கு நன்றி சொன்னதில்லை.
வருத்தமடைந்த மன்னர், அவர்களுக்குப் பாடம் புகட்ட நினைத்தார்.
ஒரு மாபெரும் அன்னதான விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். அனைத்து பிச்சைக்காரர்களையும் அனாதைகளையும் வரவழையுங்கள்.
விருந்தில் நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தூய்மையான ஆடையின்றியும் நீராடாமலும் வந்திருந்தனர்.
சுவையான உணவைப் பார்த்ததும் ஒருவரையொருவர் பிடித்துத் தள்ளி, தங்களால் முடிந்த அளவிற்கு உணவைப் பிடுங்கித் தின்ன முயன்றனர்.
















## கருத்து

**மனிதர்கள் அனைவருக்கும் தானியங்கள், காய்கறிகள், பழங்கள், பால், தயிர் போன்றவற்றை கடவுள் தனது கருணையால் வழங்கியுள்ளார். அந்நன்றியை மறவாது, அவற்றை அந்த இறைவனுக்குப் படைத்துவிட்டு அதன் பின்னர் பிரசாதத்தினை எடுத்துக் கொள்வதே மனித மரபு.**

**குந்தியின் மகனே, எதையெல்லாம் நீ செய்கின்றாயோ, எதையெல்லாம் நீ உண்கின்றாயோ, எதையெல்லாம் நீ படைக்கின்றாயோ, எதையெல்லாம் நீ கொடுக்கின்றாயோ, எந்த தவங்களையெல்லாம் நீ செய்கின்றாயோ, அதனை எனக்கு அர்ப்பணமாகச் செய்வாயாக.**

**—பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (9.27)**

# பாரதப் பண்பாட்டில் பெண்களின் பங்கு

வழங்கியவர்: திருமதி. கீத கோவிந்த தாஸி

நிலையான, மகிழ்ச்சிகரமான, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதில் பெண்கள் தூண்களைப் போன்றவர்கள். பாரதப் பண்பாட்டில், பெண்மை என்பது, மரியாதை, பெருமை, கற்பு, வீடு, குடும்பம், அன்பையும் பாதுகாப்பையும் கொடுக்கும் கணவன், களங்கமில்லாத குழந்தைகள் போன்றவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. பெண் தனது இளம் பருவத்தில் பொறுப்பான தந்தையாலும், திருமணத்திற்குப் பிறகு கணவனாலும், முதுமையில் வளர்ந்த மகன்களாலும் பாதுகாக்கப்படுகிறாள்—இதுவே பாரதத்தின் வேதப் பண்பாடு.

பாரம்பரியக் கொள்கைகள் அனைத்தும் பாழாகி வரும் இத்தருணத்தில், பெண்களுடைய கடமைகள் குறித்து யாரும் பேசுவதில்லை, யாரும் கேட்பதில்லை, யாரும் நினைத்துப் பார்ப்பதும் இல்லை. "பெண் விடுதலை," "பெண் உரிமை," "பெண் புரட்சி," "பெண் கல்வி" என பல்வேறு விஷயங்கள் சமுதாயத்தில் நிறைந்துள்ளன. இவையனைத்தும் உண்மையில் பெண்மைக்கு நன்மை செய்துள்ளனவா என்றால், சற்று யோசிக்கக்கூடியவர்களின் பதில் நிச்சயம் "இல்லை" என்பதே.

## வளர்ந்து வரும் பிரச்சனைகள்

பெண்கள் பெண்மைக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவது அவர்களது இயற்கைக்குப் புறம்பானதாகும், தற்போதைய நவீன உலகில் அதிகமான பெண்கள் தங்களது இயற்கைக்கு மாறான பாதையில் செல்வதால், பாதுகாப்பின்றி மாசுபடிந்து நிற்கின்றனர். திருமணத்திற்கு முன்பான பாலுறவு, கருச்சிதைவு, தேவையற்ற குழந்தைகள், ஒரு பெற்றோர் கொண்ட குடும்பங்கள், பாலியல் பலாத்காரங்கள் போன்ற பற்பல தீவிரமான பிரச்சனைகள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

## பெண் கல்வி

பெண்களுக்கான கல்வியில் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்ற குணங்கள் கற்பிக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைய கல்விமுறையோ இவை இருக்கக் கூடாது என்ற ரீதியில் அமைந்துள்ளது. எவ்வாறு தன்னிச்சையாக, மனம்போனபோக்கில் செயல்படுவது என்பதையே இன்றைய பெண்கள் கற்றுக் கொள்கிறார்கள். ஆண்களுக்கான கல்வி பிரம்மசரியம் என்றும், பெண்களுக்கான கல்வி கற்பு என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இன்றைய கல்வி முறை ஆண்களையும் பெண்களையும் ஒன்றாகப் படிக்க வைத்து பிரம்மசரியம், கற்பு ஆகிய இரண்டையும் ஏறக்குறைய இல்லாமல் ஆக்கிவிட்டது.

## வேலைக்குச் செல்லும் பெண்கள்

கல்வி கற்கும் பெண்கள் இயற்கை யாகவே நவ நாகரிக வாழ்க்கையை விரும்புகின்றனர். அத்தகு வாழ்க்கைக்கு அதிகமான பணம் தேவைப்படுவதால், கணவன் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக இல்லை. பெண்கள் வேலைக்குச் சென்று, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, பல்வேறு வசதிகளைப் பெறலாம், ஆனால் பாதுகாப்பைப் பெற இயலாது. வீட்டில் ஓர் ஆணுக்கு பதில் சொல்ல மறுப்போர், வெளியில் பல ஆடவருக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை. மேலும், பணம் சம்பாதிப்பதால் தாங்கள் கணவனுக்குச் சமமானவர்கள், அல்லது சில நேரங்களில் (அதிகம் சம்பாதித்தால்) கணவனைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற அகங்காரம் மேலெழுகின்றது. இவற்றையெல்லாம் உணராமல், குடும்பத்திற்கு முக்கியத்துவம் தராமல், வேலைக்கு முக்கியத்துவம் தருவதால், பல்வேறு குடும்பங்கள் நிலையற்று சிதறிப்

**வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளுக்கு (குறிப்பாக, மேற்கத்திய நாடுகளில்) தாயாகச் செயல்படுவது யார் என்று பார்த்தால், குழந்தைகள் காப்பகமும் தாதியரும்தான். தாய் தந்தையரைக் காணாத அக்குழந்தைகள் சற்று வளர்ந்த பின்னர், தொலைக்காட்சிப் பெட்டியும் கணிப்பொறியும் அவர்களின் தாயாகிவிடுகின்றன.**

போவதையும் குழந்தைகள் அன்பின்றி வளர்வதையும் காண்கிறோம்.

வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளுக்கு (குறிப்பாக, மேற்கத்திய நாடுகளில்) தாயாகச் செயல்படுவது யார் என்று பார்த்தால், குழந்தைகள் காப்பகமும் தாதியரும்தான். தாய் தந்தையரும் போதிய உறவு கொள்ளாத அக்குழந்தைகள் சற்று வளர்ந்த பின்னர், தொலைக்காட்சிப் பெட்டியும் கணிப்பொறியும் அவர்களின் பெற்றோராகி விடுகின்றன. இதனால் குழந்தைகளின் மனநிலை பாதிக்கப்பட்டு பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். தாயின் அன்பின்றி வளரும் குழந்தைகள் நிச்சயம் முறையாக வளர இயலாது.

## கவர்ச்சியான ஆடைகளும் ஆடம்பர வாழ்க்கையும்

ஒழுங்கான, ஒழுக்கமான சமுதாயத் தைப் பற்றிய துளியும் அறிவற்ற மேற்கத்திய நாடுகளில் உடலின் அழகைப் பராமரிப்பதே பெண்களின் தலையாய கடமை என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தியர்களும் அவர்களைப் பின்தொடர்வதால், அழகு நிலையங்கள், அழகிப் போட்டிகள், விளம்பர நிறுவனங் கள் போன்றவை இந்தியாவிலும் வளர்ந்து, வேத கலாச்சாரத்தைச் சீரழித்து வருகின்றன.

மேற்கத்திய ஆடைகள் அணிவதை யும் தலைவிரித்த கோலமாக வெளியில் செல்வதையும் இன்றைய பெண்கள் "பேஷன்" என்று பெருமையாக நினைக்கிறார்கள். பெண்கள் தலையை விரித்தபடி வெளியில் செல்லக் கூடாது என்றும், அவ்வாறு செல்லும் பெண்களின் மூளை பிசாசுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு குடும்பத்திற்கு அமங்களத்தைக் கொடுக்கும் என்பதையும் இன்றைய பெண்களுக்கு எவ்வாறு புரிய வைப்பது? குங்குமமோ திலகமோ இடாமல் பாழ் நெற்றியாக இருப்பது மாபெரும் பிழை என்பதை இவர்களுக்கு எவ்வாறு புரிய வைப்பது? அரைகுறையாக உடையுடுத்தி அழகைக்(?) காட்டும் ஆண்/பெண் அடுத்த பிறவியில் மரமாகப் பிறப்பார்கள் என்பதை எவ்வாறு புரிய வைப்பது? அரை நிஜார் அணிந்து வேகமாக இரண்டு சக்கர வாகனம் ஓட்டும் பெண்களின் நிலை என்ன?

"தூய்மை வெளித்தோற்றத்தில் இல்லை, மனதில்தான் உள்ளது" என்று சிலர் வாதிடலாம். ஆனால், "ஆள்பாதி ஆடை பாதி" என்ற பழமொழியை மறந்துவிடலாமா? ஒருவரின் வெளித்தோற்றம் அவரது மனதைப் பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. சூட்சும மான விதத்தில் காமத்தைத் திருப்தி செய்ய விரும்புவோர் அரைகுறை உடைகளை அணிகின்றனர், அதனை அனுபவிக்க விரும்புவோர் அவற்றை ஆதரிக்கின்றனர்.

## தனித்து வாழும் பெண்களின் பிரச்சனைகள்

ஒரு பெண் தனது கணவனை விட்டு விலகும்போதும், படிப்பதற்காகவும் வேலைக்காகவும் வெளியில் செல்லும் போதும், அவர்களுக்கு அரசாங்கமும் சமுதாயமும் பாதுகாப்பு கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால் பெரும்பாலும் அவர்கள் பாதுகாப்பின்றியே இருக் கிறார்கள். வேலைக்குச் செல்லும் இடங்களில் உடனிருக்கும் ஆண் களோடு நெருங்கிப் பழகுவதால் பல பிரச்சனைகள் உருவாகின்றன. பெண்கள் ஆண்களைவிட ஒன்பது மடங்கு அதிகமான உணர்ச்சி உடைய வர்கள் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. உணர்ச்சி உடைய வர்கள் என்பதால் எளிதில் ஏமாற்றப்படு கிறார்கள். எனவே, திருமணம் செய்து கணவனின் பாதுகாப்பில் இருத்தல் பெண்களுக்கு மிகமிக அவசியம்.

## தீர்வு தான் என்ன?

பெண்கள் தன்னிச்சையாக செயல்படுவதை பாரதப் பண்பாடு ஆதரிக்கவில்லை. பெண்கள் மட்டுமல்ல, பாரதப் பண்பாட்டில் யாருமே தன்னிச்சையாகச் செயல்படுவதற்கு அனுமதியளிக்கப்படுவதில்லை. ஒவ்வொருவரும் ஏதேனும் ஒருவரைச் சார்ந்தே வாழ வேண்டும். வேலை செய்வோர் தங்களது எஜமானரையும், எஜமானர் நாட்டின் உயர்ந்த நிர்வாகிகளையும், நிர்வாகி என்பவர் அறிஞர்களாலும் கட்டுப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தனர். அதன்படி, பெண் என்பவள் ஆரம்பத்தில் தனது தந்தையாலும் பின்னர் கணவனாலும், இறுதியில் வளர்ந்த மகன்களாலும் பாதுகாக்கப்பட வேண்டியவள். எனவே, அனைத்துப் பெண்களும் முறையாக திருமணம் செய்து கொண்டு உரிய பாதுகாப்பைப் பெற வேண்டும்.

**பெண்கள் தன்னிச்சையாக செயல்படுவதை பாரதப் பண்பாடு ஆதரிக்கவில்லை. பெண்கள் மட்டுமல்ல, பாரதப் பண்பாட்டில் யாருமே தன்னிச்சையாகச் செயல்படுவதற்கு அனுமதியளிக்கப்படுவதில்லை.**

## பெண்களுக்கு மட்டும் ஏன் கட்டுப்பாடுகள்?

பெண்களுக்கு மட்டும் அதிகமான கட்டுப்பாடுகள் ஏன் என்று ஒருவர் கேட்கலாம். உடல் மற்றும் மன ரீதியாகப் பார்த்தால் ஆண், பெண் இருபாலருக்கு மத்தியில் பல்வேறு வேற்றுமைகள் உள்ளன. பெண்களிடம் உள்ள சில தனித்தன்மைகளை மாற்ற இயலாது—உதாரணமாக, குழந்தைகளைச் சுமந்து பாலூட்டுதல் என்னும் தன்மை யினைப் பெண்களிடமிருந்து எந்த காலக்கட்டத்திலும் மாற்ற இயலாது. நாங்கள் ஆண்களுக்கு சமம் என்று பெண்கள் கூறலாம், வாதிடலாம்—பல்வேறு துறைகளிலும் முன்னேறலாம். ஆனால் கர்ப்ப காலத்தில் அவர்களால் தன்னிச்சையாக இயங்க முடியாதே, மற்றவர்களின் உதவி தேவைப் படுகிறதே.

அனைவரும் சமம், அனைவருக்கும் சம உரிமை போன்றவை கேட்பதற்கு வேண்டுமானால் நன்றாகத்

தோன்றலாம். ஆனால் அது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று. பெண்களுக்கான கட்டுப்பாடுகள் பாரதப் பண்பாட்டில் மட்டுமன்றி, இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவ மதங்களிலும் இருப்பதை நாம் காணலாம். இஸ்லாமிய பெண்கள் தங்கள் முழு உடலையும் மறைக்கும்படி பர்தா அணிந்தே வெளியில் செல்கின்றனர். இதைப் போலவே *அமிஷ்* போன்ற கிறிஸ்துவ இயக்கங்களில், பெண்கள் முழுமையான ஆடை அணிவதும் இல்லறத்தில் மட்டும் ஈடுபடுவதையும் இன்றும் காண்கிறோம்.


கற்புடைய பெண்கள் வாழும் நாட்டில் செல்வத்திற்கு பஞ்சமிருக்காது. அவர்கள் "பெய்" என்று சொன்னால் மழை பெய்யும் என்பதை நாம் பல இடங்களில் காண்கிறோம். கற்புடைய பெண்களின் மகிமைகளை சாவித்திரி, சீதை, தமயந்தி, காந்தாரி போன்றோரின் வரலாற்றில் நாம் எளிதில் காணலாம்.

## சாணக்கியரின் சில அறிவுரைகள்

மாத்ருவத் பர-தாரேஷு
பர-த்ரவ்யேஷு லோஷ்ட்ரவத்
ஆத்மவத் ஸர்வ-பூதேஷு
ய: பஷ்யதி ஸ பண்டித:

"எவனொருவன் மற்றொருவரின் மனைவியைத் தாயாகப் பார்க்கிறானோ, மற்றவரின் சொத்தைக் குப்பையாகப் பார்க்கிறானோ, மற்றவரின் துன்பத்தை தனதாக நினைக்கிறானோ, அவனே பண்டிதன் ஆவான்." (சாணக்கிய நீதி 10)

ஓர் ஆண் தனது மனைவியைத் தவிர்த்து மற்ற பெண்கள் அனைவரையும் தாயாகக் கருத வேண்டும். இதனால்தான் பாரதப் பண்பாட்டில் அனைத்து பெண்களையும் (வயதானவர்களா இளையவரா என்று பாராமல்) "அம்மா" என்று அழைக்கும் வழக்கம் இருந்து வந்தது. பாரதப் பண்பாட்டினையும் பகவத் பக்தியின் பெருமையையும் பாரெங்கும் பரப்பிய ஸ்ரீல பிரபுபாதர், இஸ்கானில் இருக்கும் பக்தர்கள் தங்களது மனைவியைத் தவிர மற்ற பெண்களை மாதாஜி (அம்மா) என்று அழைக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுத்தார்.



பக்குவமான சமுதாயத்திற்கான நீதிக் கருத்துகளை அளித்த சாணக்கியர், பெண்களைப் பற்றியும் பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

## சாணக்கியரின் இதர கூற்றுகள்

"எந்தப் பெண் தூய்மையாகவும், திறமையாகவும், கற்புடையவளாகவும், கணவனுக்கு இனிமையானவளாகவும், உண்மையானவளாகவும் இருக்கிறாளோ, அவளே உண்மையான மனைவி." (சாணக்கிய நீதி 4.13)

"அரசன், பிராமணன், துறவி ஆகியோர் நாடுகளுக்கு இடையில் சுற்றித் திரிந்தால் புகழ் பெறுவர். ஆனால் ஒரு பெண் அவ்வாறு திரிந்தால், அவள் பாழாகி விடுவாள்." (சாணக்கிய நீதி 6.4)

பெண்கள் தங்களது வீடுகளில் வசித்தபடி, கணவனையும் குழந்தைகளையும் பராமரிக்க வேண்டும்—இதுவே அவர்களின் கடமை என்பதை வேத சாஸ்திரங்கள் மட்டுமின்றி சாணக்கியரின் அறிவுரைகளிலிருந்தும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## நாரத முனிவரின் சில உபதேசங்கள்

ஸ்ரீமத் பாகவதத்தில் நாரத முனிவர் மாமன்னர் யுதிஷ்டிரருக்கு வழங்கிய அறிவுரைகளிலிருந்து (7.11.25-29) சில குறிப்புகள்:

கற்புடைய பெண்களின் நான்கு முக்கியமான ஒழுக்கங்கள்: (1) கணவனுக்குத் தொண்டு புரிதல், (2) கணவரின் விருப்பத்திற்கு இணங்க நடத்தல், (3) கணவனின் உறவினர் மற்றும் நண்பர்களிடம் பாரபட்சமின்றி நடந்துகொள்ளுதல், (4) கணவன் அனுஷ்டிக்கும் விரதங்களைத் தானும் கடைப்பிடித்தல்.

கற்புடைய பெண்களின் இதர செயல்கள்: வீட்டைத் தூய்மையாக வைத்திருத்தல், கணவனின் மகிழ்ச்சிக் காக அலங்காரம் செய்து கொள்ளுதல், வீட்டிற்குத் தேவையான பொருட்களைச் சேகரித்து வைத்தல், கணவனுக்கு உண்மையாக நடந்து கொள்ளுதல், இனிய சொற்களைப் பேசுதல், அன்போடு பணிவிடை செய்தல், மற்றும் நேரம் காலத்திற்கேற்ப பொறுப்புடன் நடந்து கொள்ளுதல்.

மேலும், கற்புடைய பெண் பேராசை இன்றி எல்லாச் சூழ்நிலைகளையும் அனுசரித்து திருப்தியுடன் வாழ வேண்டும், வீட்டு வேலைகளை திறமையாகக் கையாள வேண்டும், மற்றும் மதக் கொள்கைகளை நன்கு அறிந்து அதன்படி நடக்க வேண்டும்.

## ஸ்ரீல பிரபுபாதரின் அறிவுரைகள்

வர்ணாஷ்ரம தர்மத்தின் கொள் கைகள் நல்ல சந்ததிகளை உருவாக்கு வதற்காக அமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் நன்மக்கள் உருவாகுதல் பெண்களின் கற்பையும் நேர்மையையும் பொறுத்தே அமையும். எனவே, பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கக் கூடாது என்று மனு சம்ஹிதை கூறுகிறது. இதன் பொருள், பெண்களை அடிமைகளாக நடத்த வேண்டும் என்பதல்ல. பெண்கள் குழந்தைகளைப் போன்றவர்கள், சுலபமாக தவறான பாதைக்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். எனவே, அவர்களின் பாதுகாப்பு மிகவும் அவசியம்.

பெண்கள் நல்ல மனைவியாகவும், நல்ல பக்த குழந்தைகளை உருவாக்கும் தாயாகவும் இருக்க வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் பலமுறை கூறியுள்ளார். கணவனைப் பிரிவதோ விவாகரத்து செய்வதோ கூடவே கூடாது என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். பெண்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து உயர்வான கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நல்ல முன்மாதிரியான குடும்பங்களை உருவாக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.


“பிருதாவின் மகனே, பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள், என கீழ் குலத்தைச் சார்ந்தவர்கள் யாராக இருந்தாலும், என்னிடம் சரணடைபவர்கள் பரமகதியை அடைய முடியும்,” என்று பகவத் கீதையில் (9.29) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். எனவே, சமுதாயத்தில் பெண்களுக்கென்று தனிப்பட்ட கடமைகள் உள்ளபோதிலும், ஆன்மீகப் பாதையில் பக்குவமடைவதற்கு எந்தவொரு தடையும் அவர்களுக்கு இல்லை.

பெண்கள் தங்களது நிலையை மாற்றாமல், குடும்பத்தைப் பராமரித்தபடி, பக்தித் தொண்டில் ஈடுபட்டால், அவர்கள் நிச்சயமாக வாழ்வின் குறிக்கோளை அடையலாம்.

திருமதி. கீதா கோவிந்த தாஸி வேலூர் நகரத்தைச் சார்ந்தவர்; கணிப்பொறி வல்லுநராகப் பணியாற்றும் தன் கணவருடன் தற்போது பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகிறார்.



ஹரே கிருஷ்ண
ஹரே கிருஷ்ண
கிருஷ்ண
கிருஷ்ண
ஹரே ஹரே
ஹரே ராம
ஹரே ராம
ராம ராம
ஹரே ஹரே



# உடலுக்கும் ஆத்மாவிற்கும் உள்ள வேறுபாடு

பின்வரும் உரையாடல், மேற்கு ஜெர்மனியின் ஃப்ராங்க்பர்ட் நகரில் அமைந்திருந்த இஸ்கான் கோவிலில் தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் கார்ல்ப்ரைட் க்ராப் வோன் டர்க்ஹைம் என்னும் பேராசிரியருக்கும் இடையில் 1974ஆம் ஆண்டு நடைபெற்றதாகும்.

பேராசிரியர் டர்க்ஹைம்: யாரும் மரணமடைய விரும்புவதில்லை என்பதை நான் என்னுடைய பணியில் கண்டுள்ளேன். ஆனால் மரணத்தின் அருகில் சென்று மீண்டு வந்தவர்கள், மரணத்திற்கு அப்பாற்பட்ட ஒரு வேறுபட்ட உண்மையை உணர்வதுபோலத் தோன்றுகிறது.

ஸ்ரீல பிரபுபாதர்: ஆம். அது வித்தியாசமானதே. அந்த அனுபவம் நோய் வாய்ப்பட்டவன் குணமடைவதைப் போன்றதாகும்.

பேராசிரியர் டர்க்ஹைம்: அப்படியெனில் மரணமடையும் நபர் உயர்ந்த உண்மையை அனுபவிக்கின்றானா?

ஸ்ரீல பிரபுபாதர்: மரணமடைவது நபரல்ல. உடல் மட்டுமே. வேத ஞானத்தின்படி உடலானது எப்போதுமே மடிந்த நிலையில்தான் உள்ளது. உதாரணமாக, உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு மைக்கை எடுத்துக் கொள்வோம். அதில் மின்சாரம் பாயும்போது, ஒலியானது மின் அதிர்வுகளாக மாறி, அந்த அதிர்வுகள் பின்னர் அதிகரிக்கப்பட்டு, அதிகரிக்கப்பட்ட ஒலியை நாம் ஒலிப்பெருக்கியில் கேட்கிறோம். மைக்கும் ஒலிப்பெருக்கியும் உலோகத்தாலும் பிளாஸ்டிக்காலும் செய்யப்பட்டதே தவிர வேறில்லை. ஆனால், அக்கருவியில் மின்சாரம் பாயவில்லை எனில், அது செயல்படாது. அதுபோல, உயிர்சக்தி மனித உடலில் இருப்பதால்தான் உடல் இயங்குகிறது. உயிர்சக்தி உடலிலிருந்து வெளியேறி விட்டால், உடல் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் உடல் எப்போதும் இறந்தே கிடக்கிறது, உயிர்சக்தியே முக்கியமானது. உயிர்சக்தி இருப்பதால் மட்டுமே உடல் இயங்குவதாகத் தோன்றுகிறது. உயிரோடு இருந்தாலும் சரி, மடிந்துவிட்டாலும் சரி, உடல் என்பது ஜடப் பொருட்களின் கலவையே அன்றி வேறில்லை.

பகவத் கீதையின் முதல் போதனை, ஜடவுடலின் நிலை முக்கியமான தல்ல என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

*அஷோச்யான் அன்வஷோசஸ் த்வம் ப்ரஜ்ஞா வாதாம்ஸ் ச பாஷஸே*
*கதாஸூன் அகதாஸூம்ஷ் ச நானுஷோசந்தி பண்டிதா:*

"புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் கூறினார்: அறிவாளியைப் போல பேசும் அதே சமயத்தில் கவலைப்பட வேண்டாதவற்றிற்காக நீ கவலைப்படுகிறாய். அறிஞர் வாழ்பவர்களுக்காகவோ மாண்டவர் களுக்காகவோ வருந்துவதில்லை." (பகவத் கீதை 2.11)

ஜடவுடல் தத்துவ ஆய்விற்கு உரித்தானதல்ல. மாறாக, ஜடவுடலை இயங்கச் செய்யும் ஆத்மாவை மட்டுமே நாம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

பேராசிரியர் டர்க்ஹைம்: ஜடத்தை இயங்கச் செய்வதும் ஜடத்திற்கு அப்பாற்பட்டதுமான இந்த சக்தியைப் பற்றி நீங்கள் எவ்வாறு உங்களுடைய சீடர்களுக்கு போதிக்கிறீர்கள்? நீங்கள் உண்மை பொதிந்த தத்துவத்தைப் பேசுகிறீர்கள் என்பதை என்னால் அறிவுப்பூர்வமாக பாராட்ட முடிகிறது. இதில் சந்தேகமில்லை. ஆனால் இதை எவ்வாறு உணரச் செய்கிறீர்கள்?

ஸ்ரீல பிரபுபாதர்: அது மிகவும் எளிமையானது. உடலை இயங்கச் செய்யும் அடிப்படை சக்தி ஒன்று உள்ளது; அச்சக்தி இல்லாவிடில், உடல் இயங்காது. எனவே, "இயங்கச் செய்யும் அந்த சக்தி என்ன?" என்பதே உண்மையான கேள்வியாகும். இக்கேள்வியே வேதாந்த தத்துவத்தின் மையமாக உள்ளது. உண்மையில், வேதாந்த சூத்திரம் அதாதோ *ப்ரஹ்ம-ஜிஜ்ஞாஸா:*—"உடலினுள் உள்ள ஆத்மாவின் இயல்பு என்ன?" என்னும் சூத்திரத்துடன் தொடங்குகின்றது. எனவே, வேத தத்துவத்தைப் பயிலும் மாணவனிடம், உயிருள்ள உடலுக்கும் இறந்த உடலுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிவதற்கு முதலில் கற்றுத் தரப்படுகிறது. அவனால் இந்த தத்துவத்தைப் புரிந்துகொள்ள இயலாவிடில், எதார்த்தத்தின் அடிப்படையில் இப்பிரச்சனையை அணுகுமாறு வேண்டப்படுகிறான். ஆத்மா என்ற இயக்க சக்தி உடலினுள் இருப்பதால்தான் உடலானது, (குழந்தைப் பருவம் போன்ற) ஒரு நிலையிலிருந்து (இளமை போன்ற) மற்றொரு நிலைக்கு மாற்றமடைகிறது என்பதையும் அங்குமிங்கும் நகர்கின்றது என்பதையும் யார் வேண்டுமானாலும் புரிந்துகொள்ள முடியும். அந்த இயக்க சக்தி இல்லாதபோது, உடல்

மாற்றமடைவதோ இயங்குவதோ இல்லை. எனவே, உடலின் இயக்கத்திற்கு அதனுள் ஏதோ ஒரு சக்தி இருத்தல் அவசியம். இதைப் புரிந்துகொள்வது ஒன்றும் கடினமானதல்ல.

உடல் எப்போதும் மடிந்துபோன ஜடமே. அஃது ஒரு பெரிய இயந்திரத்தைப் போன்றது. இந்த ஒலிப்பதிவு இயந்திரம் உயிரற்ற ஜடப் பொருட்களால் செய்யப்பட்டது. ஆனால் நீங்கள், அதாவது உயிருள்ள நபர் அதன் பட்டனை அழுத்தினால் மட்டுமே அது இயங்குகிறது. அதுபோல, உடலும் உயிரற்ற ஜடமே. ஆனால் உடலினுள் உயிர்சக்தி இருக்கிறது. அச்சக்தி உடலினுள் இருக்கும் வரை உடலானது இயங்குகின்றது, உயிருள்ளதாகக் காணப்படுகிறது. உதாரணமாக, பேசுவதற்கான ஆற்றல் நம் எல்லோரிடமும் உள்ளது. எனது மாணவர்களில் ஒருவரை நான் வரச் சொல்லிக் கூப்பிட்டால் அவர் வருவார். ஆனால் இயக்க சக்தி அந்த உடலைவிட்டு வெளியேறி விட்டால், நான் அவரை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கூப்பிட்டாலும் வரமாட்டார். இதைப் புரிந்துகொள்வது மிகவும் எளிது.



நாம் அனைவரும் பல்வேறு பருவங்களைக் கடந்து வந்துள்ளோம்; ஆனால் நான் என்னும் உணர்வு மாறாமல் அப்படியே உள்ளது.

ஆனால் அந்த இயக்க சக்தி என்பது யாது? அது தனியொரு விஷயம். அக்கேள்விக்கான பதிலே ஆன்மீக ஞானத்தின் உண்மையான தொடக்கமாகும்.

பேராசிரியர் டர்க்ஹைம்: உடல் இயங்குவதற்கு அதனுள் ஏதோ ஒன்று இருக்க வேண்டும் என்று ஜடவுடலைப் பற்றி தாங்கள் எடுத்துரைத்த கருத்தினை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. உடல், அதன் இயக்க சக்தி என்று இரண்டு விஷயங்கள் உள்ளன என்பதை நாம் தெளிவாக முடிவு செய்யலாம். இருப்பினும், என்னுடைய கேள்வி என்னவெனில், "நமக்குள் இருக்கும் இயக்க சக்தியினை அறிவுபூர்வமாக மட்டுமின்றி, நேரடி அனுபவத்தினால் எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? அந்த ஆழமான உண்மையினை நேரடியாக அனுபவிப்பது முக்கியமானதல்லவா?

ஸ்ரீல பிரபுபாதர்: இயக்க சக்தி என்பது நீங்கள்தான். இயங்கும் உடலும் மடிந்த உடலும் வேறுபட்டவை. இவற்றிற்கு இடையிலான வேற்றுமை இயக்க சக்தி மட்டுமே. இயக்க சக்தி உடலினுள் இல்லாதபோது அது இறந்ததாகச் சொல்லப்படுகிறது. எனவே, உண்மையான நபருக்கும் இயக்க சக்திக்கும் வேறுபாடு இல்லை. வேதங்களில் *ஸோ 'ஹம்,* "நானே இயக்க சக்தி" என்னும் மந்திரத்தைக் காண்கிறோம். மேலும், *அஹம் ப்ரஹ்மாஸ்மி,* "நான் இந்த ஜடவுடல் அல்ல. நான் பிரம்மன், ஆத்மா" என்றும் கூறப்பட்டுள்ளது. அதுவே தன்னுணர்வு. பகவத் கீதையில் தன்னுணர்வு பெற்றவனைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. *ப்ரஹ்ம பூத ப்ரஸன்னாத்மா ந ஷோசதி ந காங்க்ஷதி,* எப்போது ஒருவன் தன்னை அறிகின்றானோ, அப்போது அவன் ஆசைப்படுவதுமில்லை, வருத்தப்படுவதுமில்லை. *ஸம: ஸர்வேஷு பூதேஷு,* அவன் அனைவருக்கும்—மனிதர்கள், விலங்குகள் என அனைத்து உயிர்வாழிகளுக்கும் சமமானவன்.

பேராசிரியர் டர்க்ஹைம்: "நான் ஆத்மா" என்று தங்களது மாணவர்களில் ஒருவர் சொல்லக் கூடும், ஆனால் அவர் அதனை அனுபவபூர்வமாக உணராமல் இருக்கலாம். இதை யோசித்துப் பாருங்களேன்.

ஸ்ரீல பிரபுபாதர்: இதை எவ்வாறு அனுபவிக்காமல் இருக்க முடியும்? தானே இயக்க சக்தி என்பது அவருக்குத் தெரியும். ஒரு விதத்தில் பார்த்தால், தான் இந்த உடலல்ல என்பதை அனைவரும் அறிவர். ஒரு குழந்தைக்குக்கூட தெரியும். நாம் பேசக்கூடிய விதத்தை ஆராய்ந்தால் இதனைக் கவனிக்க முடியும். "இஃது எனது விரல்" என்று சொல்கிறோம். "நான் விரல்" என்று யாரும் ஒருபோதும் சொல்வதில்லை. அப்படியெனில், அந்த "நான்" என்பது என்ன? இதுதான் தன்னுணர்வு எனப்படுகிறது—"நான் இந்த உடலல்ல."

இந்த உணர்வினை மற்ற உயிர்வாழிகளிடத்திலும் எடுத்துச் செல்லலாம். மனிதன் விலங்குகளைக் கொல்வது ஏன்? மற்றவர் களுக்குத் தொந்தரவு கொடுப்பது ஏன்? யாரொருவன் தன்னை உணர்ந்துள்ளானோ, அவன், "இங்கே மற்றொரு ஆத்மா உள்ளது, அவன் வேறுவகையான உடலைப் பெற்றிருக்கிறான், எனது உடலினுள் இருக்கும் இயக்க சக்தியும் அவனுடைய உடலில் இருக்கும் இயக்க சக்தியும் ஒன்றே" என்று உணர முடியும். தன்னை உணர்ந்தவன் மற்ற எல்லா உயிர்வாழிகளையும் சமமாகக் காண்கிறான். இயக்க சக்தியான ஆத்மா மனிதர்களின் உடலில் மட்டுமின்றி, விலங்குகள், பறவைகள், மீன், பூச்சிகள், மரங்கள் என எல்லா உடல்களிலும் இருக்கிறது என்று அவன் அறிவான்.

இயக்க சக்தியானது ஆத்மா எனப்படுகிறது. அஃது இறப்பின்போது ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலுக்கு மாற்றமடைகிறது. உடல் வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால் ஆத்மா அப்படியே இருக்கிறது. இந்த உடல் மாற்றத்தை நாம் நமது தற்போதைய வாழ்விலும் காண முடியும். நாம் அனைவரும் குழந்தைப் பருவத்திலிருந்து மாணவப் பருவத்திற்கும், மாணவப் பருவத்திலிருந்து இளமைக்கும், இளமையிலிருந்து முதுமைக்கும் மாறி வந்துள்ளோம். ஆயினும், இந்த மாற்றங்களுக்கு மத்தியிலும், "நான்" என்னும் உணர்வு, ஆத்மா மாறாமல் அப்படியே இருக்கிறது. உடல் பௌதிகமானது, உள்ளிருக்கும் இயக்க சக்தி ஆன்மீகமானது. இதைப் புரிந்துகொள்பவன் தன்னை உணர்ந்தவன் எனப்படுகிறான்.

*தமிழாக்கம்: இராம கிங்கர தாஸ்*

# மகிழ்ச்சியையும் வேதனையையும் கொடுத்த மகன்

**ஸ்ரீமத் பாகவதத்தின் ஆறாவது காண்டத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கதை**

மன்னர் சித்ரகேது சூரசேன நாட்டை மையமாகக் கொண்டு உலகம் முழுவதையும் ஆட்சி செய்து வந்தார். சீரும் சிறப்புமாக ஆட்சி செய்த சித்ரகேதுவிற்கு பல மனைவியர் இருந்தபோதிலும் அவருக்குக் குழந்தை பாக்கியம் கிட்டவில்லை.

ஒருநாள் அங்கிரா என்னும் மாமுனிவர் சித்ரகேதுவின் அரண்மனைக்கு வருகை புரிந்தார். வேத மரபின்படி மன்னர் தனது அரியணையிலிருந்து உடனடியாக எழுந்து அவருக்கு உரிய மரியாதையைச் செலுத்தினார்.

“பேரரசர் சித்ரகேதுவே, உமது மனம் ஏதோ வேதனையில் இருப்பதை என்னால் உணர முடிகிறது. உனது வெளிறிய முகம் ஆழ்ந்த கவலையைப் பிரதிபலிக்கின்றது. நீர் விரும்பிய எண்ணம் ஏதேனும் ஈடேறவில்லையா?” என்று முனிவர் விசாரித்தார்.


மிகச்சிறந்த சித்திகள் பெற்றிருந்த அங்கீரா, சித்ரகேதுவின் துயரத்தை நன்கு அறிந்திருந்தபோதிலும், அதனை அவரிடமிருந்தே அறிய வேண்டி வினவினார்.

“அங்கிரா மாமுனிவரே, தங்களது தவ வலிமையாலும் நெறி தவறாத குணத்தாலும் பூரண ஞானத்தைப் பெற்றிருக்கிறீர்கள். தாங்கள் என்னைப் போன்ற கட்டுண்ட ஆத்மாக்களைப் பற்றி முற்றிலும் அறிந்தவர். மேன்மை பொருந்திய ஆத்மாவே, தாங்கள் அனைத்தையும் அறிவீர். ஆயினும் நான் ஏன் கவலையில் மூழ்கியிருக்கிறேன் என்று கேட்கிறீர்கள். தங்களது ஆணைக்கு உட்பட்டு, நான் எனது கவலைக்கான காரணத்தை வெளிப்படுத்துகிறேன். பசித்தவனுக்குப் பூமாலை திருப்தியைத் தராது. அதே போன்று பரந்த தேசமும் எண்ணற்ற செல்வங்களும் எனக்கு ஒரு பொருட்டல்ல. ஏனென்றால் மனிதனுக்குத் தேவைப்படும் உண்மையான செல்வம் எனக்குக் கிடைக்கவில்லை. எனக்கென்று ஒரு மகன் இல்லை. நான் ஒரு மகனைப் பெற்று உண்மையான சந்தோஷத்தை அடைய தாங்கள் எனக்கு அருள் புரிவீரா?”

அங்கிரா மிகவும் கருணை வாய்ந்தவராக இருந்ததால், அரசருக்கு உதவ ஒப்புக் கொண்டார். அவர் தேவர்களை நோக்கி ஒரு சிறப்பான யாகத்தை நடத்தி, அந்த யாகத்தின் அவிர் பாகத்தை சித்ரகேதுவின் மனைவியரில் மிகவும் பக்குவம் வாய்ந்தவளான கிருதத்யுதி என்ற அரசிக்கு அளித்தார். “மிகச்சிறந்த பேரரசரே, விரைவில் உமக்கொரு மகன் பிறப்பான். அவன் உமது மகிழ்ச்சிக்கும் வேதனைக்கும் காரணமாக இருப்பான்” என்று மன்னரிடம் கூறிய அங்கிரா, அவரது பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து மறைந்தார்.

தனக்கு ஒரு மகன் பிறக்கப்போவதை அறிந்து சித்ரகேது மிகவும் குதூகலப்பட்டான். ஆனால் முனிவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளை எண்ணி ஆச்சரியமும் அடைந்தான்.

“எனக்குக் குழந்தை பிறந்ததும் நான் பெருமகிழ்ச்சி அடைவேன் என்று அங்கிரா கூறியது நிச்சயம் உண்மையே. ஆனால் எனது வருத்தத்திற்கும் அக்குழந்தையே காரணமாக இருக்கும் என்று அவர் எதற்காகக் கூறினார்? எனக்கு அவன் ஒரே மகனாக இருப்பதால், அவன் எனது தேசத்திற்கும் அரியணைக்கும் வாரிசாக அமைவான். அதனால் அவன் தற்பெருமை கொண்டு பணிவுடன் நடந்து கொள்ளாமல் போகலாம். அஃது எனது வேதனைக்கு காரணமாக அமையலாம். ஆனால் மகன் இல்லை என்னும் வேதனையைவிட பணிவற்ற மகன் இருப்பது நல்லதே.”



வரைபடம்: கலாநிதி தாஸ்

யாகத்தின் பிரசாதத்தினை அங்கிரா முனிவர் மன்னர் சித்ரகேதுவிற்கு அளித்தல் (அருகில் மன்னரின் சிறந்த மனைவி கிருதத்யுதி)

காலப்போக்கில் கிருதத்யுதி கர்ப்பம் தரித்து ஓர் அழகிய மகனைப் பெற்றெடுத்தாள். இதைக் கேள்விப்பட்ட அந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அரசர் சித்ரகேதுவால் தனது மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

தனது மகனை அரசர் மிகவும் கவனமுடன் வளர்த்தார். தனது அளவற்ற மகிழ்ச்சியினாலும் மகனின் நன்மைக்காகவும் தொடர்ந்து பல்வேறு தான தர்மங்களை அளவின்றி வழங்கி வந்தார். அரசி கிருதத்யுதியின் மீதான அவரது அன்பு நாள்தோறும் அதிகரித்தது. அதே சமயம் மற்ற மலட்டு மனைவியர் மீதான பிரியம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. மற்ற இராணியர்கள் தங்களது விதியை நினைத்து வருந்தினர். ஏனெனில், குழந்தை பாக்கியம் இல்லாத மனைவி கணவனால் ஒதுக்கப்படுவதும், மற்ற மனைவியர் அவளை வேலைக்காரியைப் போல நடத்துவதும் வழக்கம். இதனால் அந்த மலட்டு மனைவிகள் கோபத்தாலும் பொறாமையாலும் எரிச்சலடைந்தனர். அவர்களது பொறாமை அதிகரிக்க அதிகரிக்க, புத்தி பேதலிக்கத் தொடங்கியது, இதயங்கள் கல்போல் இறுகின. ஒருமுறை அவர்கள் அனைவரும் இரகசியமாகச் சந்தித்து, அரசரின் அன்பை மீண்டும் பெறுவதற்கான ஒரே வழி, அக்குழந்தைக்கு விஷம் கொடுத்துக் கொல்வதுதான் என்று முடிவு செய்தனர்.

அதன்படி, மன்னரின் ஆசை மகனுக்கு இதர மனைவியர் ஒருநாள் விஷம் வைத்தனர். அதனை அறியாத அரசி கிருதத்யுதி, தனது அறையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த மகனைக் காண விரும்பினாள். அவள் தனது மகனை மிகவும் நேசித்ததால், அவனைப் பிரிந்து சில நேரம்கூட இருக்க மாட்டாள். தூக்கத்திலிருந்து அவனை எழுப்பிக் கொண்டு வருமாறு அவள் தனது தாதிக்கு ஆணையிட்டாள்.

தாதி குழந்தையை அணுகியபோது, அவனது கண்கள் மேல் நோக்கியிருப்பதைப் பார்த்தாள். உயிர் இருப்பதற்கான அறிகுறி ஏதும் தென்படவில்லை. எல்லாப் புலன்களும் செயலற்று இருந்ததைக் கண்ட அவள், "நான் ஒழிந்தேன்" என்று கதறியபடி தரையில் விழுந்தாள். பெரும் கலவரமடைந்த அவள் தனது மார்பில் இருகைகளாலும் அடித்துக் கொண்டு பலமாக அழுதாள்.

தாதியின் அழுகுரலைக் கேட்டு அறையினுள் விரைவாக நுழைந்த அரசி, தனது மகன் இறந்து கிடப்பதைக் கண்டாள், மிகுந்த துயரத்துடன் கூந்தலும் ஆடையும் சரிய, மயங்கியபடி தரையில் சாய்ந்தாள். பலமான அழுகுரலைக் கேட்ட அரண்மனைவாசிகள் அனைவரும் அங்கு வந்து துக்கத்தில் பங்கேற்றனர். விஷம் கொடுத்த இராணியர்களும் முதலைக் கண்ணீர் வடித்தனர்.

தனது மகனின் திடீர் மரணத்தைக் கேள்விப்பட்ட அரசர் துயரத்தினால் குருடரானார். அவரது வேதனை பெருந்தீயைப் போல் அவரைத் தாக்கியது, மரணமடைந்த குழந்தையைக் காண ஓடியபோது பலமுறை தட்டுத் தடுமாறி விழுந்தார். மந்திரிகளும் ராஜ பரிவாரங்களும் சூழ அரசர் தனது மகனின் அறையினுள் நுழைந்து, மகனின் பாதங்களுக்கு அருகில் மயங்கி விழுந்தார். அவரது தலைமுடி கலைந்தது, உடைகள் எல்லாப் பக்கங்களிலும் சிதறின. மன்னருக்கு மீண்டும் உணர்வு திரும்பியபோது வேகமாக மூச்சு வாங்கியது, கண்களில் கண்ணீர் ததும்பியது, துளியும் பேச முடியவில்லை.

இராணி தனது கணவரின் பெரும் துயரத்தையும், இறந்துபோன மகனையும் கண்டு பல்வேறு வழிகளில் புலம்பத் தொடங்கினாள். அஃது அரண்மனையில் இருந்த அனைவரின் இதயத்திலும் வலியை அதிகரிக்கச் செய்தது. அரசி அணிந்திருந்த பூமாலை அவளது உடலிலிருந்து சரிந்து கீழே விழுந்தது, அவளது மிருதுவான அடர்ந்த கருங்கூந்தல் சிக்குண்டது, உருண்டோடிய கண்ணீர் அவளது கண்களிலிருந்த ஒப்பனையைக் கலைத்தது.

"விதியே, தந்தை உயிருடன் இருக்கும்போதே மகனைக் கொன்றுவிட்டாய். உயிர்வாழிகளின் எதிரி நிச்சயமாக நீயே, உனக்கு கருணையே இல்லை." தனது அன்பிற்குரிய மகனிடம் திரும்பிய அவள், "எனதன்பு மகனே, நான் ஆதரவற்றவள், பாதிக்கப்பட்டவள். நீ என்னை விட்டுப்போகக் கூடாது. உன்னால் எப்படி என்னை விட்டுப் பிரிந்து செல்ல முடியும்? புலம்பிக் கொண்டிருக்கும் உனது தந்தையைப் பார்! நீ வெகுநேரம் தூங்கிவிட்டாய். இப்போது எழுந்திரு. உனது நண்பர்கள் உன்னை விளையாட அழைக்கின்றனர். நீ பசியுடன் இருப்பாய், உடனே எழுந்து சாப்பிடு. எனதன்பு மகனே, நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி, உனது அழகான புன்முறுவலை இனிமேல் என்னால் காண முடியாதே. நீ நிரந்தரமாகக் கண்களை மூடிக் கொண்டாய். இந்த லோகத்திலிருந்து திரும்பி வர முடியாத வேறு லோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டாயே. எனதன்பு மகனே, உனது இனிமையான குரலைக் கேட்க முடியாமல், என்னால் இனிமேல் உயிர் வாழ முடியாது."

அரசன் வாய்விட்டு உரக்கக் கதறத் தொடங்கினான். தாயும் தந்தையும் புலம்புவதைக் கண்ட மற்றவர்களும் குழந்தையின் அகால மரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எதிர்பாராத இந்த விபத்தினால் துயரமடைந்த குடிமக்களும் ஏறக்குறைய உணர்வை இழந்தனர்.

துக்கக் கடலில் மூழ்கி அரசர் கிட்டத்தட்ட இறந்த நிலையில் கிடப்பதை அறிந்த மாமுனிவர் அங்கிரா தனது நண்பரான நாரத முனிவருடன் அரண்மனைக்குச் சென்றார்.

துயரத்தால் தமது மகனின் உடலருகில் விழுந்து கிடந்த அரசரை இரு முனிவர்களும் கண்டனர். அரசனைப் பார்த்த அங்கிரா, "அறியாமை எனும் இருளிலிருந்து விழித்தெழுவாயாக! மன்னரே, இறந்து கிடக்கும் இந்த உடல் உம்முடன் கொண்டிருக்கும் உறவு என்ன? நீர் இந்த இறந்த உடலுடன் கொண்டுள்ள உறவுதான் என்ன? நீங்கள் இருவரும் தந்தையும் மகனும் என்ற உறவில் இருப்பதாக நீர் கூறலாம். ஆனால் அவன் பிறப்பதற்கு முன்பு அந்த உறவு இருந்ததா? தற்போது அந்த உறவு உண்மையில்

**ஆனால் அவன் பிறப்பதற்கு முன்பு அந்த உறவு இருந்ததா? தற்போது அந்த உறவு உண்மையில் உள்ளதா? அவன் தற்போது இறந்துவிட்டானே, இனிமேல் அந்த உறவு தொடருமா?**

உள்ளதா? அவன் தற்போது இறந்துவிட்டானே, இனிமேல் அந்த உறவு தொடருமா? அரசரே, கடலலையின் ஆற்றலால் மணல் துகள்கள் சில நேரங்களில் ஒன்று சேர்வதையும் சில நேரங்களில் பிரிந்துவிடுவதையும் போல, ஜடவுடலை ஏற்ற உயிர்வாழிகள் சில நேரங்களில் நெருங்கி வருகின்றனர், சில நேரங்களில் அதே காலத்தின் வலிமையினால் பிரிக்கப்படுகின்றனர்," என்று அறிவுக்கூர்மையுடன் உரைத்தார். உடல் தொடர்பான எல்லா உறவுகளும் தற்காலிகமானவை என்பதை அரசர் புரிந்துகொள்ள வேண்டும் என்று அங்கிரா விரும்பினார்.

முனிவர் மேலும் தொடர்ந்தார்: "எனதன்பு அரசரே, நான் முதன்முதலாக உமது அரண்மனைக்கு வந்தபோதே ஆன்மீக அறிவு என்ற மாபெரும் பரிசை உமக்குக் கொடுத்திருக்க முடியும். ஆனால் உமது மனம் ஜட விஷயங்களில் மூழ்கியிருந்ததை அறிந்ததால், உமக்கு மகிழ்ச்சியையும் வேதனையையும் அளித்த ஒரு மகனைக் கொடுத்தேன். மகன்களையும் மகள்களையும் பெற்றெடுத்தவர்களின் துன்பத்தை நீர் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறீர். மனைவி, மக்கள், செல்வம் போன்ற கண்ணுக்குப் புலப்படும் பொருட்கள் யாவும் கனவைத் தவிர வேறில்லை. ஆகவே, மன்னர் சித்ரகேதுவே, உண்மையில் நீர் யார் என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். நீர் எங்கிருந்து வந்தீர் என்பதையும், இவ்வுடலை நீத்த பிறகு எங்குச் செல்வீர் என்பதையும், பௌதிக உலகின் துன்பத்தினால் ஏன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளீர் என்பதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்."

பின்னர், நாரத முனி அங்கே ஓர் அதிசயத்தை நிகழ்த்தினார். அவர் தமது அபூர்வ சக்தியால் மன்னரின் இறந்து கிடந்த மகனின் உடலினுள் மீண்டும் ஆத்மாவை வரவழைத்தார். உடனடியாக அந்த அறை முழுவதும் ஒளி பரவியது, இறந்த குழந்தை அசைய ஆரம்பித்தது. நாரதர் கூறினார், "உயிர்வாழியே, எல்லா அதிர்ஷ்டமும் உனக்கு உரித்தாகட்டும். உனது தாய் தந்தையரைப் பார். உனது மரணத்தால் உனது நண்பர்களும் உறவினர்களும் துயரத்தில் மூழ்கியுள்ளனர். நீ அகால மரணமடைந்ததால் உனது எஞ்சிய வாழ்நாள் அப்படியே இருக்கிறது. ஆகவே, உடலில் மறுபிரவேசம் செய்து, எஞ்சிய காலத்தையும் உனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் மகிழ்ச்சியுடன் கழிப்பாயாக. அதன்பின் உனது தந்தையிடமிருந்து அரியணையையும் ஐஸ்வர்யங்களையும் பெற்றுக் கொள்ளலாம்."

நாரதரின் யோக சக்தியினால், இறந்து கிடந்த உடலினுள் ஆத்மா மீண்டும் பிரவேசிக்க, உடனே அக்குழந்தை எழுந்து உட்கார்ந்தான். ஒரு சிறுவனின் அறிவாற்றலைப் போல் அல்லாமல் முக்தியடைந்த ஆத்மாவைப் போன்ற பூரண அறிவுடன் பேச ஆரம்பித்தான். "எனது ஜடச் செயல்களின் பலனாக உயிர்வாழியாகிய நான் சில நேரங்களில் தேவர்களின் உடலுக்கும் சில நேரங்களில் இழிந்த விலங்கின் உடலுக்கும் சில நேரங்களில் காய்கறிகளாகவும் பிறவி எடுப்பதுடன், சில நேரங்களில் மனித உடலிலும் தோன்றுகிறேன். இவ்வாறு ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலைப் பெற்று வருகிறேன். இவர்கள் இருவரும் இதற்குமுன் எந்தப் பிறவியில் எனக்கு தாயும் தந்தையுமாக இருந்தனர்? உண்மையில் யாரும் எனக்கு தந்தையுமல்ல, தாயுமல்ல. இதற்கு முன் இதுபோன்று இலட்சக்கணக்கான பெற்றோர்களைப் பெற்றிருக்கும்போது,



இறந்துபோன சித்ரகேதுவின் மகனை நாரதர் அழைக்க, அவ்வுடலினுள் மீண்டும் புகுந்த ஆத்மா பேசத் தொடங்கியது.

இந்த இருவரை மட்டும் எனது தாய் தந்தையாக நான் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?"

பௌதிக மூலப்பொருட்களாலான ஓர் உடலினுள் நித்தியமான ஆத்மா பிரவேசிப்பதாக வேதங்கள் நமக்கு போதிக்கின்றன. இங்கே மன்னர் சித்ரகேதுவும் அவரது மனைவியும் உருவாக்கிய ஓர் உடலில் அப்படிப்பட்ட ஓர் உயிர்வாழி பிரவேசித்ததை நாம் பார்க்கிறோம். உண்மையில் அவன் அவர்களது மகன் அல்ல. அந்த உயிர்வாழி முழுமுதற் கடவுளின் நித்தியமான மகன். ஆனால் அவன் இந்த ஜடவுலகை அனுபவிக்க விரும்புவதால், பல்வேறு உடல்களில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை பகவான் அவனுக்குத் தருகிறார். இருந்தபோதிலும் உயிர்வாழியைப் பொறுத்தவரையில் தாய் தந்தையரிடமிருந்து பெற்ற உடலுடன் அவனுக்கு உண்மையில் எந்த உறவும் கிடையாது. எனவே, சித்ரகேதுவின் மகனுடைய உடலைப்பெற்ற அந்த ஆத்மா அரசரையும் அரசியையும் தனது பெற்றோராக ஏற்பதற்கு முற்றிலும் மறுத்துவிட்டான்.

ஆத்மா தொடர்ந்து பேசினான்: "வேகமாக ஓடும் நதியைப் போல இந்த ஜடவுலகில் காலப்போக்கில் எல்லா மனித உயிர்களும் நண்பர்களாகவும் உறவினர்களாகவும் எதிரிகளாகவும் மாறுகின்றனர். இன்னும் பல உறவுகளில் அவர்கள் நடுநிலையாகவும் நடந்துகொள்கின்றனர். இவ்விதமான பலதரப்பட்ட உறவுகளில் எவரும் நிரந்தர உறவினராக இருப்பதில்லை."

இறந்துபோன தனது மகனுக்காக சித்ரகேது புலம்பிக் கொண்டிருக்கிறார், ஆனால் அவர் தமது நிலைமையை, "எனது மகனின் வடிவில் வந்த இந்த ஜீவன், எனது முந்தைய பிறவியில் எனக்கு எதிரியாக இருந்தவன். தற்போது அவன் எனது மகனாகப் பிறந்து எனக்கு வலியையும் வேதனையையும் தருவதற்காகவே என்னைவிட்டு நிரந்தரமாகச் செல்கிறான்," என்று வேறுவிதமாக சிந்தனை செய்திருக்கலாம். அரசர் இறந்து போன மகனைத் தனது முந்தைய எதிரியாக ஏன் கருதக் கூடாது? எதிரியின் மரணத்திற்காக வருந்துவதற்குப் பதிலாக ஏன் பெருமகிழ்ச்சி அடையக் கூடாது?

சித்ரகேதுவின் மகனின் உடலில் இருந்த உயிர்வாழி மேலும் கூறினான்: "விற்பது, வாங்குவது என்று தங்கம் உட்பட பல்வேறு பொருட்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறிக் கொண்டிருப்பதைப் போல, கர்மத்தின் பலனாக ஒரு தந்தைக்குப்பின் மற்றொரு தந்தை என்று ஒரு ஜீவன் பல்வேறு ஜீவன்களின் உடல்களுக்குள் விந்துவின் மூலமாகச் செலுத்தப்பட்டு பிரபஞ்சம் முழுவதும் சுற்றிக் கொண்டிருக்கிறான்."

ஜீவன் எந்தவொரு தாய் தந்தையின் மூலமாகவும் பிறப்பதில்லை என்று பகவத் கீதையில் விளக்கப்பட்டுள்ளது. தாய் தந்தை என்று சொல்லக்கூடியவர்களிடமிருந்து ஜீவனின் உண்மையான அடையாளம் முற்றிலும் வேறுபட்டது. இயற்கையின் சட்டப்படி தந்தையின் விந்துவிலிருந்து தாயின் கருப்பைக்குள் ஆத்மா ஆற்றலுடன் செலுத்தப்படுகிறான். எந்த குணமுடைய தந்தையைப் பெற வேண்டும் என்பதை அந்த ஆத்மா தானே நேரடியாகத் தேர்வு செய்ய முடியாது, அவனது முந்தைய வாழ்க்கையைப் பொறுத்து அது தானாக நிச்சயிக்கப்படுகிறது. ஒரு பொருள் கொண்டுவரப்பட்டு விற்கப்படுவதுபோல பல்வேறு தாய் தந்தையரிடம் செல்லும்படி ஆத்மா கட்டாயப்படுத்தப்படுகிறான்.

அவன் சில நேரங்களில் விலங்கினத் தந்தையிடமும், சில சமயங்களில் மனிதத் தந்தையிடமும் பாதுகாப்பைத் தேடிச் செல்கிறான். சில சமயங்களில் அவன் பறவையினங்களுக்குள் தனது தந்தையை ஏற்கிறான். மேலும் சில சமயங்களில் ஸ்வர்க லோகத்தில் உள்ள தேவர்களையும் தாய் தந்தையராக ஏற்கிறான்.

ஜீவன் பலதரப்பட்ட உடல்களைக் கடந்துசெல்லும்போது, ஒவ்வொரு முறையும் அவன் தாய் தந்தையரைப் பெறுகிறான். அஃது ஒன்றும் கடினமானதல்ல. ஆனால் ஓர் ஆன்மீகத் தந்தையை, உண்மையான ஆன்மீக குருவைப் பெறுவதுதான் கடினமானது. ஆகவே ஆன்மீக குருவைத் தேடிக் கண்டுப்பிடிப்பதுதான் மனித உடல் பெற்ற ஜீவனின் கடமையாகும். ஏனெனில், அவரது வழிநடத்துதலால் மட்டுமே அவன் பிறப்பு இறப்பின் சுழற்சியிலிருந்து விடுதலை பெற்று ஆன்மீக உலகிலுள்ள அவனது உண்மையான இல்லத்திற்குத் திரும்பிச் செல்ல முடியும்.

**அரசர் இறந்துபோன மகனை ஏன் தனது முந்தைய எதிரியாகக் கருதக் கூடாது? எதிரியின் மரணத்திற்காக வருந்துவதற்குப் பதிலாக ஏன் பெருமகிழ்ச்சி அடையக் கூடாது?**

ஆத்மா தொடர்ந்து கூறினான்: "உயிர்வாழி நித்தியமானவன். தாய் தந்தை என்று சொல்லக்கூடியவர்களுடன் எவ்வித உறவும் இல்லாதவன். அவன் தன்னை அவர்களுடைய மகன் என்று பொய்யாக ஏற்று, அவர்களிடம் பாசமாகப் பழகுகிறான். இருப்பினும் மரணத்திற்குப் பின் அந்த உறவு முற்றுப் பெறுகிறது. இத்தகு உறவுகளுக்காக ஒருவன் மகிழ்ச்சியடையவோ வேதனைப்படவோ கூடாது. உயிர்வாழி நித்தியமானவன், அழிவற்றவன். அவனுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை. அவன் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. அவன் குணத்தின் அடிப்படையில் முழுமுதற் கடவுளுக்கு சமமானவன். இருவரும் ஆன்மீகமானவர்கள். இருப்பினும், அளவில் மிகவும் சிறியவன் என்பதால், ஜீவன் ஜட சக்தியால் அறியாமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான். அதன்படி அவன் தனது பல்வேறு ஆசைகளுக்கும் செயல்களுக்கும் ஏற்ற தனது உடல்களை ஏற்படுத்திக் கொள்கிறான்."

ஒரு ஜீவனின் ஜடவுலக வாழ்க்கைக்கு அவனே பொறுப்பு என்று வேதம் நமக்குச் சொல்கிறது. இங்கு அவன் பிறவி சக்கரத்தில் சிக்குண்டு பல்வேறு ஜடவுடலை மாறி மாறி ஏற்று வருகிறான். அவன் விரும்பினால், ஜட வாழ்க்கை என்னும் சிறையில் தொடர்ந்து துன்பப்படவும் முடியும், ஆன்மீக உலகிலுள்ள இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்லவும் முடியும். ஜீவன்களின் விருப்பத்திற்குத் தகுந்த உடல்களைக் கொடுப்பதற்கு தனது ஜட சக்தியின் மூலம் பகவான்தான் ஏற்பாடு செய்கிறார் என்றபோதிலும், அவரது உண்மையான விருப்பம், பெரிய இராட்டினம் போன்ற பிறவி சக்கரத்தில் கட்டுண்டிருக்கும் ஜீவன்கள் தங்களது ஜட வாழ்க்கையை விட்டு வெளியேறி, தமது திருநாட்டிற்கு திரும்பி வர வேண்டும் என்பதே.

திடீரென்று சித்ரகேதுவின் மகன் மௌனமானான், அவ்வுடலிலிருந்து தூய ஆத்மா வெளியேறியது, உயிரற்ற அவ்வுடல் தரையில் சாய்ந்தது. சித்ரகேதுவும் இதர உறவினர்களும் திகைத்தனர். அவர்கள் பாசம் என்னும் தங்களது சங்கிலியை அறுத்தெறிந்தனர், துக்கப்படுவதையும் நிறுத்தினர். பின்னர் அவர்கள் அந்த உடலுக்கு இறுதிச்சடங்கு செய்து எரித்தனர். குழந்தைக்கு விஷம் கொடுத்த மன்னரின் மனைவிகள் மிகவும் அவமானமடைந்தனர். அங்கிரா முனியின் அறிவுரைகளை நினைத்து, குழந்தை பெறும் பேராசையைக் கைவிட்டனர். பிராமணர்களின் கட்டளையைப் பின்பற்றி தங்களது பாவச் செயல்களுக்குப் பரிகாரமாக யமுனை நதியில் நீராடி பிரார்த்தனை செய்துவிட்டுத் திரும்பி வந்தனர்.

மறுபிறப்பின் விஞ்ஞானம் உட்பட ஆன்மீக அறிவைப் பூரணமாகத் தெரிந்துகொண்டதால், மன்னர் சித்ரகேதுவும் அவரது இராணியும் வலி, பயம், துயரம், மாயை ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லக்கூடிய பாசத்தை சுலபமாகக் கைவிட்டனர். இந்த ஜடவுடலின் மீதான பற்றுதலைக் கைவிடுவது மிகவும் கடினம் என்றாலும், அவர்கள் திவ்யமான அறிவு என்னும் வாளைக் கொண்டு பற்றுதலை அறுத்தெறிந்து விட்டதால், அதனை எளிதாகக் கைவிட முடிந்தது.

*தமிழாக்கம்: இராம கிங்கர தாஸ்*




# பகவத் கீதை
## உண்மையுருவில்
## —ஒரு கண்ணோட்டம்
### அத்தியாயம் பதினொன்று




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் பத்து அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **பதினொன்றாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# விஸ்வரூபம்

### பத்தாம் அத்தியாயத்தின் சுருக்கம்

அர்ஜுனன் தனது நண்பன் என்பதால், கிருஷ்ணர் தன்னைப் பற்றிய விவரங்களை தாராளமாக எடுத்துரைத்தார். கிருஷ்ணரே அனைத்திற்கும் மூலம் —தேவர்கள், ரிஷிகள் என யாராலும் அவரது வைபவங்களை முழுமையாக அறிய இயலாது. ஜடவுலகிலும் ஆன்மீக உலகிலும் என்னவெல்லாம் உள்ளதோ, அவை அனைத்திற்கும் கிருஷ்ணரே மூலம் என்பதை அறிந்தோர் அவரது பக்தித் தொண்டில் ஈடுபடுகின்றனர். அத்தகைய பக்தர்கள் தங்களுக்குள் கிருஷ்ணரைப் பற்றி உரையாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். அவர்கள் தன்னை நோக்கி வருவதற்குத் தேவையான அறிவை கிருஷ்ணரே அவர்களுக்கு வழங்கி, அந்த ஞான ஒளியைக் கொண்டு அவர்களின் இதயத்திலுள்ள அறியாமை என்னும் இருளை அகற்றுகிறார். கிருஷ்ணரே எல்லாவற்றின் ஆதி மூலம் என்பதை அவரது திருவாயிலிருந்து கேட்ட அர்ஜுனன் அதை அவ்வாறே ஏற்றுக் கொண்டான். நாரதர், அஸிதர், தேவலர், வியாசர் போன்ற பலரும் கிருஷ்ணரை அவ்வாறே முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டுள்ளதை அர்ஜுனன் மேற்கோள் காட்டினான். கிருஷ்ணர் கூறிய அனைத்தையும் முழுமையாக ஏற்ற அர்ஜுனன், இவ்வுலகில் கிருஷ்ணர் எவ்வாறெல்லாம் வீற்றுள்ளார் என்பதை அறிய விரும்பியதால், கிருஷ்ணர் தனது வைபவங்களைப் பட்டியலிட்டார். இறுதியில் அந்த வைபவங்கள் அனைத்தும் தனது தோற்றத்தின் சிறு பகுதியே என்று தெளிவுபடுத்தினார்.

### அர்ஜுனனின் விருப்பம்

"விஸ்வரூபம்" என்னும் தலைப்பைக் கொண்ட பதினொன்றாம் அத்தியாயம், கிருஷ்ணர் கூறிய பரம இரகசியங்களைக் கேட்டதால் தனது மயக்கம் தெளிவடைந்து விட்டதாக அர்ஜுனன் அறிவிப்பதுடன் தொடங்குகின்றது. கிருஷ்ணரின் அழிவற்ற பெருமைகளை முற்றிலுமாக ஏற்றபோதிலும், அவர் தமது திருவாயினால் கூறிய வைபவங்கள் அனைத்தையும் அவரது விஸ்வரூபத்தில் பார்க்க வேண்டும் என்ற ஆவலை அர்ஜுனன் முன்வைத்தான். தனக்கு முன்பாக இரு கைகளுடன் வீற்றிருக்கும் கிருஷ்ணரே உத்தம புருஷர் என்பதை முற்றிலும் அறிந்திருந்த அர்ஜுனனுக்கு விஸ்வரூபத்தைப் பார்க்க வேண்டும் என்பதோ, அதன் மூலம் தெளிவுபெற வேண்டும் என்பதோ அவசியமில்லை; தான் ஏற்கனவே தெளிவு பெற்றுவிட்டதாக அவன் அறிவித்துவிட்டான். தம்மையே கடவுள் என்று பிரகடனம் செய்யும் மூடர்கள் பலரை நாம் தற்போது நமது சமுதாயத்தில் காண்கிறோம்;

அத்தகு அயோக்கியர்களிடம் சென்று விஸ்வரூபத்தைக் காட்டும்படி கேட்டால், அவர்கள் சில வருடங்கள் கழித்துக் காட்டுவதாக கதை சொல்கின்றனர்—அவர்களின் முகத்திரையைக் கிழிப்பதற்கு உதவியாக இருக்கும் என்ற ஒரே காரணத்திற்காகவே அர்ஜுனன் விஸ்வரூபத்தைக் காட்டும்படி கிருஷ்ணரிடம் வேண்டினான். வேறு எந்த காரணமும் கிடையாது. "நானே கடவுள்" என்று பிதற்றியபடி திரிந்து கொண்டிருக்கும் அனைத்து அயோக்கியர்களிடமும், "நீ கடவுள் என்றால், விஸ்வரூபத்தைக் காட்டு" என்று நாம் தைரியமாக சவால் விடலாம்.

## விஸ்வரூபத்தைப் பற்றிய கிருஷ்ணரின் விளக்கம்

விஸ்வரூபத்தைக் காட்டுவதற்கு முன்பு கிருஷ்ணர் விஸ்வரூபத்தின் தன்மையினை அர்ஜுனனுக்கு எடுத்துரைத்தார். விஸ்வரூபமானது இலட்சக்கணக்கான வடிவில் பலதரப்பட்ட நிறத்துடன் இருக்கும் என்றும், அதில் ஆதித்தியர்கள், வசுக்கள், ருத்திரர்கள், அஸ்வினி குமாரர்கள் உட்பட பல்வேறு தேவர்களைக் காண முடியும் என்றும் கிருஷ்ணர் தெரிவித்தார். மேலும், அர்ஜுனன் பார்க்க விரும்பியவை அனைத்தையும் அதில் பார்க்க முடியும் என்றும், வருங்காலத்தில் பார்க்க விரும்புபவற்றையும் பார்க்க முடியும் என்றும் கூறினார். இருப்பினும், அர்ஜுனனுடைய தற்போதைய கண்களைக் கொண்டு அதைக் காண முடியாது என்பதால், கிருஷ்ணர் அவனுக்கு தெய்வீகக் கண்களை அளித்து தமது யோக ஐஸ்வர்யத்தைக் காணக் கோரினார்.

## விஸ்வரூபத்தைப் பற்றிய விளக்கம்

கிருஷ்ணரின் விஸ்வரூபத்தில், அனேக கண்களையும் வாய்களையும் அற்புதமான தரிசனங்களையும் அர்ஜுனன் கண்டான். திவ்யமான ஆயுதங்கள், தெய்வீகமான மாலைகள், ஆடைகள் மற்றும் வாசனைத் திரவியங்களால் நிறைக்கப்பட்ட விஸ்வரூபம், அற்புதமாக, பிரகாசமாக, எல்லையற்றதாக, எங்கும் பரவிக் காணப்பட்டது. ஆகாயத்தில் பல்லாயிரக்கணக்கான சூரியன்கள் ஒரே நேரத்தில் உதயமானால், அஃது ஒருவேளை அந்த விஸ்வரூப ஜோதிக்கு இணையாகலாம். அதைக் கண்ட அர்ஜுனன் வியப்பும் குழப்பமும் அடைந்தான். கிருஷ்ணருடனான நண்பனாக (*ஸக்ய ரஸத்தில்*) பழகி வந்த அர்ஜுனன், ஆச்சரியத்தினால் மயங்கி, சிரம் தாழ்த்தி கூப்பிய கரங்களுடன் ஒரு தொண்டனைப் போன்று (*தாஸ்ய ரஸத்தில்*) பிரார்த்தனை செய்யத் தொடங்கினான்.

"எல்லா தேவர்களும் பற்பல இதர உயிரினங்களும் உமது உடலில் வீற்றிருப்பதைக் காண்கிறேன். பிரம்ம தேவர், சிவபெருமான், ரிஷிகள், மற்றும் நாகங்களையும் நான் காண்கிறேன். உம்மில் நான் ஆதியையோ நடுவையோ முடிவையோ காண வில்லை. பற்பல கைகள், வயிறுகள், வாய்கள், கண்கள் எல்லையற்று எங்கும் பரவியுள்ளதைக் காண்கிறேன். மகுடங்கள், கதைகள் மற்றும் சக்கரத்தினால் அலங்கரிக்கப்பட்டுள்ள உமது உருவம் எல்லா இடங்களிலும் பிரகாசமாக விளங்கு கின்றது. எல்லா அகிலங் களுக்கும் இறுதி ஆதாரம் நீரே, நீர் அழிவற்றவர், தர்மத்தின் நித்திய பாதுகாவலர், சூரியனும் சந்திரனும் உமது கண்கள். வானம், பூமி மற்றும் இரண்டிற்கும் இடைப்பட்ட இடம் என எல்லா திசைகளிலும் வியாபித்துள்ளீர். உம்மைக் கண்டு மூவுலகமும் குழம்பியுள்ளது. தேவர்கள், ரிஷிகள், ருத்திரர்கள், ஆதித்தியர்கள் என அனைவரும் உம்மை வியப்புடன் நோக்கி பிரார்த்தனை செய்கின்றனர். உமது உருவைக் கண்டு அவர்கள் அனைவரும் குழம்பியுள்ளதைப் போன்றே நானும் குழம்புகிறேன்."

கிருஷ்ணரின் விஸ்வரூபத்தைப் பார்த்த மாத்திரத்தில், ஆச்சரியத்தை உணர்ந்த அர்ஜுனன் தற்போது பயத்தை உணரத் தொடங்கியுள்ளான். பயத்துடன் அர்ஜுனன் மேலும் தொடர்ந்தான்: "திறந்த வாய்களும் பிரகாசமான கண்களும் எனக்கு பயத்தைக் கொடுக்கின்றன. என்னால் மனதின் சமநிலையை தக்க வைக்க முடியவில்லை. என்மேல் கருணை கொள்ளும். கால நெருப்பினைப் போன்ற உமது முகங்களையும் பயங்கரமான பற்களையும் கண்டபின் மனதை என்னால் நிலைநிறுத்த முடியவில்லை. திருதராஷ்டிரரின் அனைத்து மகன்கள், அவர்களின் கூட்டத்தினர், பீஷ்மர்,



விஸ்வரூபத்தில் பலவற்றைக் கண்ட அர்ஜுனன், கூப்பிய கரங்களுடன் பிரார்த்தனை செய்தல்

துரோணர், கர்ணன், நமது படையின் முக்கிய வீரர்கள் என பலரும் உமது வாயினுள் விரைகின்றனர். சிலர் பற்களுக்கிடையே நசுக்கப்படுவதையும் நான் காண்கிறேன். உக்கிரமான ரூபமே, தாங்கள் யாரென்று தயவுசெய்து எனக்குக் கூறும். உங்களது நோக்கம் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.''

## கிருஷ்ணரின் கருவியாகச் செயல்படுதல்

கிருஷ்ணர் யார் என்பது அர்ஜுனனுக்கு முன்னரே தெரியும். இருப்பினும், விஸ்வரூபத்தைக் கண்ட பயத்தில் மூழ்கிய அர்ஜுனன், ''நீங்கள் யார்?'' என்ற கேள்வியை எழுப்புகிறான். கிருஷ்ணர் இரு கரங்களுடன் கூடிய தனது அழகிய ரூபத்திற்கு மாறாக, ஒரு கோரமான ரூபத்தை ஏற்றிருந்ததால், அர்ஜுனனின் இக்கேள்வி பொருத்தமானதே. பகவான் பதிலளித்தார்: ''காலம் நான். உலகங்களை அழிப்பவற்றில் மிகப்பெரியவன், எல்லா மக்களையும் அழிப்பதற்காக வந்துள்ளேன். உங்களைத் (பாண்டவர்களைத்) தவிர இரு தரப்பிலுள்ள அனைவரும் அழிக்கப்படுவர்.'' கிருஷ்ணர் இங்கு கால ரூபத்திலிருந்து பேசுவதால், தன்னை காலம் என்று அடையாளப்படுத்துகிறார். அவர் மேலும் தொடர்ந்தார்: ''அனைவரையும் நான் ஏற்கனவே கொன்றுவிட்டேன். நீ எழுந்து போரிடத் தயாராகு. உனது எதிரிகளை வென்று, புகழுடன் வளமான அரசினை அனுபவிப்பாயாக. போரில் எனது கருவியாக மட்டும் செயல்படு.'' கருவியாக மட்டும் செயல்படும்படி கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு விடுத்த அறிவுரை கவனிக்கத்தக்கதாகும். உலகிலுள்ள ஒவ்வொரு செயலும் பகவானின் திட்டத்தின்படி நடக்கின்றது. இருப்பினும், அத்திட்டத்தினை நிறைவேற்றியதற்கான பெருமையை அவர் தனது பக்தர்களுக்கு வழங்க விரும்புகிறார். எனவே, பகவத் பக்தர்களின் திட்டமும் பகவானின் திட்டமும் ஒன்றே. பக்தர்களின் திட்டத்தின்படி நடப்பவர்கள் பகவானின் செயலில் ஒரு கருவியாகச் செயல்படும் நல்வாய்ப்பினைப் பெறுவர்.

## பதினொன்றாம் அத்தியாயத்தின் ஐந்து பகுதிகள்

**(1) அர்ஜுனனின் வேண்டுகோளும் விஸ்வரூபத்தைப் பற்றிய கிருஷ்ணரின் விளக்கமும் (11.1–8)**

அனைத்தையும் விஸ்வரூபத்தில் காண அர்ஜுனனின் ஆசை

விஸ்வரூபத்தில் காண முடியும் என்னும் கிருஷ்ணரின் உறுதி

**(2) விஸ்வரூபத்தைப் பற்றிய விளக்கம் (11.9–31)**

அர்ஜுனனின் நட்பு ஆச்சரியத்தினால் மாறுதல் (11.14)

விஸ்வரூபத்தைப் பற்றிய அர்ஜுனனின் விளக்கம் (11.15–23)

ஆச்சரியத்திலிருந்து பயம் உண்டாகுதல் (11.24)

தாங்கள் யாரென்று எனக்குக் கூறுங்கள்

நான் காலம், அனைத்தையும் அழிக்க வந்தவன்

**(3) கருவியாகச் செயல்படு (11.32–34)**

எனது கருவியாகச் செயல்படு, பெருமைகளை நீ பெற்றுக் கொள்

**(4) அர்ஜுனனின் பிரார்த்தனைகள் (11.35–46)**

அவமரியாதை செய்தமைக்காக மன்னிக்கவும்

மீண்டும் உமது உண்மை ரூபத்தைக் காட்டும்

**(5) கிருஷ்ண ரூபத்தின் சிறப்புகள் (11.47–55)**

இரு கரங்களைக் கொண்ட கிருஷ்ணரைக் காண்பது அரிது

அவரைப் புரிந்துகொள்வதற்கான வழிமுறை பக்தி மட்டுமே

## அர்ஜுனனின் பிரார்த்தனைகள்

கிருஷ்ணரின் உரையைக் கேட்ட அர்ஜுனன், கூப்பிய கரங்களுடன் நடுங்கியபடி மீண்டும் மீண்டும் அவரை வணங்கினான், மிகுந்த பயத்துடன் தழுதழுத்த குரலில் பேசத் தொடங்கினான். ''புலன்களின் அதிபதியே, உமது திருநாமத்தைக் கேட்பதால் உலகம் மகிழ்கின்றது, அசுரர்களோ அங்குமிங்கும் ஓடுகின்றனர். நீரே ஆதிபுருஷர், நீரே வாயு, நீரே எமன், நீரே அக்னி, நீரே வருணன், நீரே பிரம்மா, நீரே அனைத்தும். உமக்கு எனது ஆயிரக்கணக்கான வந்தனங்கள். முன்னிருந்தும் பின்னிருந்தும் எல்லா திக்குகளில் இருந்தும் உமக்கு வணக்கங்கள்.

''உமது பெருமைகளை அறியாமல், நட்பின் காரணத்தினால், ''கிருஷ்ணா, யாதவா, நண்பனே,'' என்றெல்லாம் உம்மை நான் அழைத்துள்ளேன். நான் செய்த செயல்கள் பித்தத்தினாலோ பிரேமையினாலோ தெரியவில்லை —என்னை மன்னித்து அருளுங்கள். பொழுதுபோக்கான கேளிக்கையின் போதும், ஒரே படுக்கையில் படுத்திருந்த போதும், உடன் அமர்ந்து உணவருந்தியபோதும், தங்களை சில சமயங்களில் தனியாகவும் சில சமயங்களில் நண்பர்களுக்கு மத்தியிலும் அவமரியாதை செய்துள்ளேன். இத்தகைய குற்றங்களுக்காக என்னை மன்னிப்பீராக.''

கிருஷ்ணருடனான நெருங்கிய உறவுகளுக்காக அர்ஜுனன் இங்கு வருத்தப்படுவதுபோலத் தோன்றுகிறது. கிருஷ்ணரை மிகவுயர்ந்தவராக பார்த்து அவரிடம் பயபக்தியுடன்



அர்ஜுனனின் விருப்பத்தின்படி நான்கு கரங்களுடைய விஷ்ணு ரூபத்தைக் காட்டிவிட்டு மீண்டும் தமது சுய ரூபத்திற்கு கிருஷ்ணர் திரும்புதல்.

நடந்துகொள்ளுதல் என்பது, அவரை எஜமானராக பாவித்து பழகக்கூடிய *தாஸ்ய ரஸமாகும்*. ஆனால், இறைவன் எவ்வளவு உயர்வு பெற்றவராக இருந்தாலும், அவர் தனது பக்தர்களுடன் சமமாகப் பழகும்போது, நண்பனாக விளையாடும்போது, அஃது அவரது உயர்நிலையினை மேலும் உயர்த்துகின்றது. கிருஷ்ணருடன் அவ்வாறு நண்பனாகப் பழகுபவர்கள் தங்களின் நட்பை என்றும் மறக்க இயலாது என்பதை நாம் இங்கு அர்ஜுனனின் பிரார்த்தனையிலிருந்து அறிகிறோம்.

ஒரு தந்தை தனது மகனின் குற்றங்களையும் ஒரு நண்பன் நண்பனின் குற்றங்களையும் பொறுத்துக்கொள்வதுபோல, தனது குற்றங்களை பொறுத்து அருளும்படி அர்ஜுனன் கிருஷ்ணரிடம் வேண்டினான். மேலும், விஸ்வரூபத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சியுற்றபோதிலும் பயத்தினால் குழம்புவதாகவும் அவன் கூறினான். அதைத் தொடர்ந்து, சங்கு, சக்கரம், கதை, தாமரை என நான்கு கரங்களுடன் கூடிய தெய்வீக ரூபத்தைக் (விஷ்ணுவின் ரூபத்தைக்) காண்பதற்கான தனது பேராவலை அவன் வெளிப்படுத்தினான்.

## கிருஷ்ண ரூபத்தின் சிறப்புத் தன்மை

கோரமான உருவத்தைக் கண்டு பாதிக்கப்பட்டிருந்த தன் நண்பனிடம், இத்தகைய விஸ்வரூபத்தை இதுவரை யாரும் கண்டதில்லை என்று கூறி கிருஷ்ணர் உற்சாகப்படுத்தியபோதிலும், அவனை மேலும் தவிக்கச் செய்யாமல் இருக்கும்பொருட்டு விஸ்வரூபத்தை மறைத்தார். அர்ஜுனனின் விருப்பப்படி நான்கு கரங்களுடன் தனது விஷ்ணு ரூபத்தை வெளிப்படுத்திவிட்டு மீண்டும் இரண்டு கரங்களுடன் கிருஷ்ண ரூபத்திற்குத் திரும்பினார். அச்சமுற்று இருந்த அர்ஜுனன் உற்சாகமடைந்தான், மனதில் அமைதியை உணர்ந்தான், தனது சுய நிலையை (*ஸக்ய ரஸத்தை*) மீண்டும் பெற்றதாக உணர்ந்தான். இரு கரங்களுடன் மனிதனைப் போன்ற உருவில் அர்ஜுனனின் முன்பு தோன்றிய கிருஷ்ணர் தனது அந்த ரூபத்தின் மகிமையினை விளக்கினார்.

"இப்போது நீ பார்க்கும் இந்த உருவம் காண்பதற்கு மிகவும் அரிதானது. பிரியமான இந்த உருவத்தைக் காண்பதற்கான வாய்ப்பை தேவர்கள்கூட எப்போதும் நாடுகின்றனர். வேதங்களைக் கற்பதாலோ, கடுந்தவங்களைச் செய்வதாலோ, தானங்களைக் கொடுப்பதாலோ, வழிபாடு செய்வதாலோ என்னை இவ்வாறு புரிந்துகொள்ள முடியாது. கலப்படமற்ற பக்தித் தொண்டினால் மட்டுமே இதுபோன்று நேரடியாகக் காணவும் புரிந்துகொள்ளவும் முடியும். எனது தூய பக்தித் தொண்டில் ஈடுபட்டு, கர்மம் மற்றும் ஞானத்திலிருந்து முற்றிலும் விடுபட்டு, எனக்காகச் செயல்பட்டு, என்னையே வாழ்வின் பரம இலக்காக வைத்துள்ளவன் நிச்சயமாக என்னை வந்தடைகிறான்."

விஸ்வரூபம் என்னும் இந்த அத்தியாயத்தின் இறுதி ஸ்லோகங்கள் பல்வேறு உண்மைகளை எடுத்துரைக்கின்றன. கிருஷ்ணர் இரு கரங்களுடன் மனிதரைப் போலத் தோன்றும்போது அவரை சாதாரண மனிதனாக நினைக்கக்கூடிய முட்டாள்களுக்கு புரிய வைக்கும் விதத்தில் தனது விஸ்வரூபத்தைக் காட்டிய கிருஷ்ணர், இரு கரங்களுடன் கூடிய தனது ரூபம் காண்பதற்கு அரிதானது என்று கூறியதன் வாயிலாக தனது பெருமையை நிலைநாட்டினார். கிருஷ்ணர் தனது யோக மாயை எனும் சக்தியினால் மறைக்கப்பட்டுள்ள காரணத்தினால், யார் வேண்டுமானாலும் அவரைக் காண்பதோ உணர்வதோ சாத்தியமல்ல. கிருஷ்ணர் தன்னை யாரிடம் வெளிப்படுத்துகிறாரோ, அவர் மட்டுமே அவரைக் காண முடியும். விஸ்வரூபத்தைக் காண்பதைக் காட்டிலும் கிருஷ்ணரைக் காண்பது கடினமானதாகும். விஷ்ணு ரூபத்தை கிருஷ்ணர் காட்டினார் என்பதைக் கொண்டு, கிருஷ்ணரே அனைத்து விஷ்ணு ரூபங்களுக்கும் மூலம் என்பதையும் நாம் அறியலாம். மேலும், கிருஷ்ணரை அடைவதற்கான ஒரே வழி, களங்கமற்ற பக்தித் தொண்டு மட்டுமே என்பதும் பக்தித் தொண்டை பயிற்சி செய்யாமல் கீதையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யும் அங்கீகாரமற்ற நபர்கள் தமது காலத்தை வெறுமனே விரயம் செய்து கொண்டுள்ளனர் என்பதும் தெள்ளத் தெளிவாக உணரத்தக்கவை.

திரு. ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், பகவத் தரிசனம் உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.


தமிழில் உள்ள
ஒரே முழுப் பதிப்பு
அனைத்து இஸ்கான்
கோவில்களிலும் கிடைக்கும்.
மேலும் விவரங்களுக்கு, 98948 14553
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம், வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு, மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்களும் சுவைக்கக்கூடிய அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### முதல் காண்டம், அத்தியாயம் 2, ஸ்லோகம் 19

*ததா ரஜஸ்-தமோ-பாவா: காம-லோபாதயஷ்சயே*
*சேத ஏதைர் அனாவித்தம் ஸ்திதம் ஸத்த்வே ப்ரஸீததி*

### மொழிபெயர்ப்பு

உறுதியான அன்புத் தொண்டு இதயத்தில் நிலைநிறுத்தப்பட்ட உடனேயே, இயற்கையின் ரஜோ மற்றும் தமோ குணங்களால் விளையும் காமம், பேராசை, ஏக்கம் போன்றவை இதயத்திலிருந்து மறைந்து விடுகின்றன. அதன்பின் பக்தன் ஸத்வ குணத்தில் நிலைபெற்று பூரண மகிழ்ச்சியை அடைகிறான்.

### பொருளுரை

ஆன்மீக பேரானந்தத்தில் பூரண திருப்தியடைந்திருப்பதே ஓர் உயிர்வாழியின் உண்மையான ஸ்வரூப நிலையாகும். வாழ்வின் இந்நிலை, *ப்ரஹ்ம-பூத* அல்லது *ஆத்மானந்தீ,* அதாவது, சுய திருப்தியுற்ற நிலை என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சுய திருப்தி, செயலற்ற முட்டாள்களின் திருப்தியைப் போன்றதல்ல. செயலற்ற முட்டாள், முட்டாள்தனமான அறியாமையில் உள்ளான்; சுய திருப்தியுடைய *ஆத்மானந்தீயோ* பௌதிக நிலைக்கு அப்பாற்பட்டவராக உள்ளார். உறுதியான பக்தித் தொண்டில் நிலைபெற்றவுடன் இத்தகு பக்குவநிலை அடையப்படுகின்றது. பக்தித் தொண்டு என்பது செயலற்ற நிலை அல்ல, மாறாக ஆத்மாவின் கலப்படமற்ற செயலாகும்.

ஜடத்துடன் தொடர்புகொள்ளும்போது ஆத்மாவின் செயல்கள் கலப்படமடைகின்றன. அவ்வாறு பாதிக்கப்பட்ட செயல்கள், காமம், ஆசை, ஏக்கம், செயலற்ற தன்மை, மூடத்தனம், உறக்கம் ஆகிய வடிவங்களில் வெளிப்படுகின்றன. ரஜோ மற்றும் தமோ குணத்தின் இத்தகு விளைவுகளை முற்றிலும் நீக்கினால் பக்தித் தொண்டின் விளைவுகள் புலப்பட தொடங்கும். உடனடியாக ஸத்வ குணத்தில் நிலைபெறும் பக்தன், மேலும் உயர்வு பெற்று வாஸுதேவ நிலை அல்லது சுத்த-ஸத்வ எனப்படும் தூய ஸத்வ குணத்திற்கு உயர்வு பெறுகிறான். இந்த சுத்த-ஸத்வ நிலையில் மட்டுமே இறைவனின் மீதான தூய அன்பின் காரணத்தினால் எப்போதும் கிருஷ்ணரை நேருக்கு நேராகக் காண முடியும்.

பக்தன் எப்போதும் சுத்த-ஸத்வ குணத்தில் இருப்பதால், அவன் யாருக்கும் தீங்கிழைப்பதில்லை. ஆனால் பக்தரல்லாதவன், எவ்வளவு கற்றவனாக இருப்பினும், எப்போதும் தீங்கிழைப்பவனாகவே இருப்பான். பக்தன் முட்டாளும் அல்ல, உணர்ச்சிவயப்படுபவனும் அல்ல. தீங்கிழைப்பவர்களும் முட்டாள்களும் உணர்ச்சி வயப்படுபவர்களும் எவ்வளவுதான் புற ஆடைகளால் தங்களை பக்தர்களைப் போலக் காட்டிக் கொண்டாலும், அவர்கள் பகவானின் பக்தனாக இருக்க முடியாது. பக்தனொருவன் எப்போதும் பகவானின் எல்லா நற்குணங்களையும் பெற்று தகுதியுடன் விளங்குகிறான். அத்தகு தகுதிகளின் அளவில் பகவானுக்கும் அவரது பக்தனுக்கும் வேறுபாடு இருக்கலாம், ஆனால் தன்மையில் அவர்கள் இருவரும் சமமானவர்கள்.

### ஸ்லோகம் 20

*ஏவம் ப்ரஸன்ன-மனஸோ பகவத்-பக்தி-யோகத:*
*பகவத்-தத்த்வ-விக்ஞானம் முக்த-ஸங்கஸ்ய ஜாயதே*

### மொழிபெயர்ப்பு

இவ்வாறு பகவானின் பக்தித் தொண்டுடன் ஏற்பட்ட தொடர்பினால் யாருடைய மனம் தெளிவடைந்ததோ, அவர் சுத்த-ஸத்வ குணத்தில் (கலப்படமற்ற நற்குணத்தில்) நிலைபெற்று, எல்லா பௌதிகத் தொடர்பிலிருந்தும் முக்தி பெற்று, பரம புருஷ பகவானைப் பற்றிய உண்மையான விஞ்ஞானபூர்வமான அறிவைப் பெறுகிறார்.

### பொருளுரை

பல்லாயிரக்கணக்கான சாதாரண மனிதர்களில் அதிர்ஷ்டம் கொண்ட ஒருவன் மட்டுமே வாழ்வில் பக்குவமடைய முயற்சி செய்கிறான் என்று பகவத் கீதையில் (7.3) கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான மனிதர்கள் ரஜோ மற்றும் தமோ குணங்களால் வழிநடத்தப்படுவதால், அவர்கள் காமம், ஆசை, ஏக்கம், அறியாமை, உறக்கம் ஆகியவற்றில் எப்போதும் ஈடுபட்டுள்ளனர். மனிதர்களைப் போன்றுள்ள இத்தகைய மிருகங்களுக்கிடையில் மனித வாழ்வின் பொறுப்புகளை உணர்ந்தவன் உண்மையான மனிதனாவான், அவன் விதிக்கப்பட்ட கடமைகளைப் பின்பற்றி தனது வாழ்வைப் பக்குவப்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறான். அவ்வாறு மனித

வாழ்வில் வெற்றி பெற்ற ஆயிரக்கணக்கான மனிதர்களில், யாரேனும் ஒருவரே முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றி விஞ்ஞானபூர்வமாக அறிந்திருக்கலாம். மேலும், கிருஷ்ணரைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான அறிவை பக்தித் தொண்டின் (பக்தி யோகத்தின்) மூலமாக மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்றும் பகவத் கீதையில் (18.55) கூறப்பட்டுள்ளது.

அதே கருத்து மேற்கூறப்பட்ட ஸ்லோகத்திலும் உறுதி செய்யப்படுகிறது. சாதாரண மனிதன் மட்டுமின்றி மனித வாழ்வில் வெற்றி பெற்றவனும்கூட, முழுமுதற் கடவுளை விஞ்ஞானபூர்வமாகவோ பக்குவமாகவோ அறிந்து கொள்ள முடியாது. தான் ஜடத்தினால் படைக்கப்பட்டவன் அல்ல என்றும் ஆன்மீக ஆத்மா என்றும் ஒருவன் புரிந்துகொள்ளும்போது, மனித வாழ்வின் பக்குவநிலை அடையப்படுகின்றது. தனக்கு ஜடத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை ஒருவன் அறியும்போது, அவன் உடனடியாக தனது பௌதிக ஏக்கங்களைக் கைவிட்டு ஆன்மீக நிலையில் மகிழ்ச்சியை அடைகிறான். இந்த வெற்றி, ரஜோ மற்றும் தமோ குணங்களைக் கடக்கும்போது, அதாவது உண்மையான தகுதி வாய்ந்த பிராமணனாக மாறும்போது சாத்தியமாகின்றது.

பிராமணன் என்பவன் ஸத்வ குணத்தின் அடையாளம். ஸத்வ குணத்தில் இல்லாதவர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் அல்லது அதை விடக் கீழானவர்களாவர். பிராமண நிலை என்பது அதன் நற்குணங்களின் காரணத்தால், மனித வாழ்வின் மிகவுயர்ந்த நிலையாகக் கருதப்படுகின்றது. எனவே, குறைந்தபட்சம் பிராமணனின் தகுதியைப் பெறாவிடில், ஒருவன் பக்தனாக முடியாது. பக்தன் தனது செயலினால் ஏற்கனவே பிராமணனாக இருக்கிறான். ஆனால் அதுவே முடிவான நிலையல்ல. மேலே கூறப்பட்டதுபோல, உண்மையான தெய்வீக நிலையை அடைவதற்கு அத்தகைய பிராமணர் வைஷ்ணவரின் நிலைக்கு மாற வேண்டும். தூய வைஷ்ணவரொருவர் முக்தி பெற்றவராகவும் பிராமணனின் நிலையைக் காட்டிலும் உயர்ந்தவராகவும் உள்ளார். பௌதிகத் தளத்தில் பிராமணனும் ஒரு பந்தப்பட்ட ஆத்மாவே. ஏனெனில், பிராமண நிலையில் பிரம்மனை அல்லது தெய்வீகத்தைப் பற்றிய கருத்து உணரப்பட்டாலும், பரம புருஷரைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான அறிவு முழுமை பெறாமலே உள்ளது. முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதற்கு பிராமண நிலையைக் கடந்து வாஸுதேவ நிலையை அடைய வேண்டும்.

முழுமுதற் கடவுளைப் பற்றிய விஞ்ஞானம் ஆன்மீகப் பாதையில் மேற்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உரியதாகும். முட்டாள்களும் குறைமதி படைத்தவர்களும் முழுமுதற் கடவுளைப் புரிந்துகொள்வதில்லை; அவர்கள் கிருஷ்ணரைப் பற்றி மனம்போன போக்கில் விளக்கமளிக்கின்றனர். உண்மை எது என்றால், பௌதிக குணங்களின் களங்கங்களிலிருந்து விடுபட்டாலன்றி, ஒருவன் பிராமணனின் நிலையை எட்டினாலும்கூட முழுமுதற் கடவுளைப் பற்றிய விஞ்ஞானத்தைப் புரிந்துகொள்ள முடியாது. தகுதி பெற்ற பிராமணன் உண்மையான வைஷ்ணவனாக மாறும்போது, அத்தகு ஆனந்தமயமான முக்தி பெற்ற நிலையில், புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் என்றால் என்ன என்பதை உண்மையில் புரிந்துகொள்ள முடியும். (தொடரும்)

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(நவம்பர் 1, 2011 முதல் டிசம்பர் 15, 2011 வரை)**

### நவம்பர்

3, வியாழன், கோபாஷ்டமி,
ஸ்ரீநிவாஸ ஆச்சாரியர் மறைவு நாள்

6, ஞாயிறு, உத்தன ஏகாதசி விரதம்,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:08–10:01
ஸ்ரீல கௌர கிஷோர் தாஸ பாபாஜி மறைவு நாள்,
பீஷ்ம பஞ்சகத்தின் முதல் நாள்

9, புதன், நான்காவது சாதுர்மாதத்தின் கடைசி நாள்

10, வியாழன், பீஷ்ம பஞ்சகத்தின் கடைசி நாள்

21, திங்கள், உத்பன்ன ஏகாதசி விரதம்,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:15–10:05

### டிசம்பர்

6, செவ்வாய், மோக்ஷத ஏகாதசி,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:20–10:11
ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட நாள்

14, புதன், ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் மறைவு நாள்
மதியம் வரை விரதம்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகந்நாதர் கோவில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.




# பகவத் தரிசனம்

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!



அரசியல், சினிமா, விளையாட்டு என்று எத்தனை நாள்கள் படித்துக் கொண்டிருப்பீர்? முறையான குரு சீடப் பரம்பரையில் பெறப்பட்ட ஆன்மீகச் செய்திகள் தங்கள் வீட்டின் கதவுகளைத் தட்ட வேண்டாமா? பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக மாறுங்கள்.



* உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு
* ஆழ்ந்த தத்துவக் கட்டுரைகள்
* ஆன்மீக ஆனந்தம்
* நாட்டின் நிகழ்வுகளுக்கான ஆன்மீகப் பார்வை
* கண்களைக் கவரும் அழகிய படங்கள்
* இன்றைய உலகத்திற்கு உகந்த ஆன்மீக வழிகாட்டி
* எளிய தமிழில்...




## தங்கள் சந்தாவை புதுப்பியுங்கள்

தங்களது முகவரியின் வலதுபுறத்தில் சந்தா முடிவுறும் மாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை கவனித்து தங்கள் சந்தா முடிவுறுவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**பகவத் தரிசனம்,**

**இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை – 600011.**

தொலைபேசி: (044) 25514553, 98948 14553. மின்னஞ்சல்: tamilbtg@gmail.com

☐ ஆம், என்னை பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக இணைத்துக் கொள்ளுங்கள்

பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

☐ ஒரு வருடம், ரூ 160

☐ இரண்டு வருடம், ரூ 300

☐ ஐந்து வருடம், ரூ 700

பின்கோடு: ____________ தொலைபேசி எண்கள்: ____________________

மின்னஞ்சல்: ____________

குறிப்பு: வரைவோலைகளும் (DD) At par காசோலைகளும் (cheque) "Bhaktivedanta Book Trust" என்ற பெயரில், சென்னையில் செலுத்தப்படக்கூடியதாக இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.




# தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

**இராஜபாளையம்**
613, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

**இராமநாதபுரம்**
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

**தூத்துக்குடி**
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553

**கம்பம்**
53, குமுளி ரோடு, காந்தி சிலை அருகில்.
போன்: 04554 274553

**அருப்புக்கோட்டை**
102, 103 திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை.
போன்: 04566 224553

**தென்காசி**
244/78, ரயில்வே பீடர் ரோடு,
தென்காசி.

**சேலம்**
62-66, பஜார் ரோடு, பழைய சேலம் கம்பே,
கோட்டை, மாரியம்மன் கோயில் அருகில், சேலம்.
போன்: 0427 2251553